# தமிழன்

THAMILAN

Follow us:

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 177 சுபகிருது வருடம், மாசி மாதம் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை (24.02.2023) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் ஷஃபான் - 03, 0115 886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50


## உஷ்



முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி ரணிலை சந்தித்து தனிப்பட்ட முறையில் நீண்ட நேரம் பேச்சு நடத்தியதாக தகவல்.

முக்கியமான பல அரசியல் விடயங்கள் இந்த பேச்சில் இருந்ததாக மைத்ரிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

விமல் வீரவங்ச அணியிலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெளியேறியுள்ளதால், அரசியலில் எதுவும் நடக்கலாம் என்கின்றன அரசியல் வட்டாரங்கள்.

## கமெண்ட் கந்தர்...

தேர்தல் ஒத்திவைப்பு ஒரு கலை எண்டா அதில பிக்காஸோ தான் ரணில் ஐயா...!





# தேர்தல் அறிவிப்பு சட்டவிரோதம்!

## ஜனாதிபதி ரணில் சபையில் பகிரங்கம்

நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்பதுதான் தனது முதலாவது கடமையெனத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நிதிப் பற்றாக்குறை காரணமாக தேர்தலை நடத்த முடியாதெனவும் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டமை சட்ட விரோதமானதெனவும் பாராளுமன்றத்தில் நேற்று பகிரங்கமாக அறிவித்தார்.

பாராளுமன்றம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்றுக்காலை கூடியபோது, அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் கீழான தீர்மானம் பற்றிய விவாதத்தில் கலந்துகொண்டு விசேட உரை நிகழ்த்தும்போதே ஜனாதிபதி இந்த விடயத்தை தெரிவித்தார்.

ஜனாதிபதி அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஆணைக்குழுவின் உறுப்பினர்களை நான் தனியாக சந்தித்தபோது, தற்போதுள்ள நிலை குறித்து அவர்களுக்கு அறிவித்துள்ளேன். இதனை செயலாளருக்கு தெரிவிக்கவேண்டிய அவசியம் கிடையாது. அதன்பின்னர், ஜனவரி 5ஆம் திகதி மாலை 3 மணிக்கு நானும், பிரதமரும், சட்ட மா அதிபரும் இவர்களைச் சந்தித்தோம். தேர்தலை ஒத்திவைப்பதற்காக நாம் இவர்களைச் சந்திக்கவில்லை. அந்த சமயம் ஆணைக்குழுவில் பிளவு ஏற்பட்டிருந்தது.

உண்மையில் நாட்டில் பொருளாதார நெருக்கடி நிலைமையொன்று இருக்கிறது. எங்களிடம் பணம் இல்லை. அத்துடன், தேர்தலை நிறுத்தத் தேவையும் இல்லை. அவர்களின் பணிகளை அவர்களுக்கு முன்னெடுக்க முடியும். இதுகுறித்து அனைவரிடமும் பேச்சுவார்த்தை நடத்தி இதற்கான தீர்வைக் காணமுடியும். என்ன செய்வது? எதற்காக கூச்சலிடுகிறீர்கள்? உண்மையில், இந்த ஆணைக்குழு பாராளுமன்றத்திற்கே பொறுப்புக் கூறவேண்டும். தெரிவுக்குழுவொன்றை நியமிக்குமாறு யோசனையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. எனவே, இந்தத் தெரிவுக்குழுவை நியமித்து, இந்தத் தகவல்களை சேகரித்து அறிக்கையொன்றைத் தயாரித்து உயர் நீதிமன்றத்திற்கு அந்த அறிக்கையை அனுப்ப வேண்டும்.

### பாராளுமன்றத்தில் கடும் எதிர்ப்பு

02 பக்கம்

02 பக்கம்

## இராஜினாமா வேண்டாம்

### முஜிபுர் எம்.பிக்கு ஜனாதிபதி அனுப்பிய தகவல்

பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்யவேண்டாமென அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மானுக்கு தாம் தகவல் அனுப்பியதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மானை பாராளுமன்றத்திற்கு அழைத்து வந்தவர் தானே என ஜனாதிபதி கூறியதுடன், அவர் பலிக்கடா...

02 பக்கம்

## தேர்தல் தொடர்பான வழக்கு ஒத்திவைப்பு

### மே 11இல் மீண்டும் விசாரணைக்கு

(ம.அகிலேஸ்)

நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைக்குமாறு கோரி ஓய்வு பெற்ற இராணுவ கோர்ணல் ஒருவர் சமர்ப்பித்த மனு எதிர்வரும் மே மாதம் 11ஆம் திகதிக்கு ஒத்திவைப்பதாக உயர் நீதிமன்றம் நேற்று அறிவித்தது.

இந்த மனுவை விசேடமாகக் கருதி எஸ்.துரைராஜா மற்றும் ஷிரான் குணரத்ன ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர் குழு முன்னிலையில் கடந்த திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஓய்வுபெற்ற கோர்ணல் டபிள்யூ.எம்.விஜேசுந்தர இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது தேர்தல் ஆணைக்குழு சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், தேர்தல் பணிகளை...

02 பக்கம்

## சட்டத்தின் பிரகாரமே செயற்பட்டோம்!

### ஆணைக்குழு அறிவிப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான அறிவிப்பு தேர்தல் சட்டம் மற்றும் நாட்டின் அரசியலமைப்பின் பிரகாரம் வெளியிடப்பட்டதாக தேசிய தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழுவின் அனைத்து உறுப்பினர்களும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைமுறைக்கு சம்மதம் வெளியிட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை,...

02 பக்கம்



## சிவனொளிபாதமலையில் 08 தொன் ப்ளாஸ்ரிக் கழிவு

02 பக்கம்

## தேர்தல் செலவு ரூ.5,000 இலட்சம்

### பெவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டு

(நா.தினுஷா)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக இதுவரையில் ஐந்தாயிரம் இலட்ச ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. ஒருவேளை தேர்தலை நடத்தாவிட்டால் பொதுமக்களின் நிதிக்கு யார் பொறுப்புக்கூறுவது? என்று சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாட்டின் (பெவ்ரல்) நிறைவேற்றுப் பணிப்பாளர்...

02 பக்கம்

## அரசியல் வலையில் சிக்கவைக்கப்பட்டேன்!

### ஹர்ஷ எம்.பி. ஆவேசம்

(நா.தினுஷா)

நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் செயலாற்றிய என்னை அரசியல் வலைக்குள் சிக்கவைத்தமை தொடர்பில் கவலைகொள்கிறேன். திருடர்களுக்கு இடமளிக்காமையின் காரணமாகவே அரசாங்கக் கணக்குக் குழுவிலிருந்து நான் நீக்கப்பட்டுள்ளேன். ஆனாலும், ஏனைய நாட்களை விட இந்த திருடர்களுக்கு எதிராக செயலாற்றுவேன் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஹர்ஷ டி சில்வாவை கோபா குழுவிலிருந்து நீக்கி, அந்தக் குழுவுக்கு புதிய தலைவர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில், தன்னை பதவி நீக்கியமை குறித்து...

02 பக்கம்

## பிரபாகரன்தான் எங்கள் தலைவன்

### சபையில் சிறீதரன் வெளிப்படைப் பேச்சு

(நா.தினுஷா)

எங்களது வாழ்நாள் முழுவதும் வேலுப்பிள்ளை பிரபாகரனை மறக்கமாட்டோம். எங்கள் தலைவர் அவரே. இந்த நாட்டின் தலைவர்களாலும் அவரை மறக்கமுடியாது. அதற்குக் காரணம், அவர் நேர்மையான, கன்னியமான மனிதராவார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற விவாதத்தின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்து...

02 பக்கம்

## கோப், கோபாவுக்கு புதிய தலைவர்கள்

அரசாங்க நிதி பற்றிய குழுவின் (கோபா) புதிய தலைவராக எதிர்க் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திசாநாயக்க தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அரசாங்க நிதி பற்றிய குழு அதன் புதிய தலைவராக தெரிவுசெய்யப்பட்ட மயந்த திசாநாயக்க தலைமையில் நேற்று முதன் முறையாகக் கூடியது.

நேற்று கூடிய தெரிவுக் குழுவினால் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளுக்கு அமைய அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவராக எதிர்க்கட்சியை...

02 பக்கம்

## மரணதண்டனைக்கான ஆவணத்தில் ஒப்பமிடேன்!

### ஜனாதிபதியின் அறிவிப்பை நீதிமன்றுக்கு தெரியப்படுத்தினார் சட்டமா அதிபர்

(த.யுவராஜ்)

இலங்கையில் எந்தவொரு நீதிமன்றத்தினாலும் குற்றவாளிகளுக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனையை நிறைவேற்றும் ஆவணத்தில் கையெழுத்திடாமலிருக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளதாக சட்டமா அதிபரால் உயர் நீதிமன்றுக்கு நேற்று அறிவிக்கப்பட்டது.

மரணதண்டனை அமுலாக்குவதை இடைநிறுத்தும்படி சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசாவின் சட்ட நிறுவனத்தினால் தாக்கல்செய்யப்பட்ட 12 மனித உரிமை மீறல் மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் ஐவர் அடங்கிய...

02 பக்கம்

## சனத் நிஷாந்தவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை



நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவுக்கு எதிராக இரண்டு குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றிற்கு அறிவித்துள்ளார்.

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு தொடர்பாக சட்டத்தரணிகளான பிரியலால் சிறிசேன, விஜிதகுமார மற்றும் இலங்கை நீதிச் சேவை சங்கம் ஆகியோர் தாக்கல் செய்த மூன்று முறைப்பாடுகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே...

02 பக்கம்

## ரெலிகொம் வருமானம் ரூ.108 பில்லியனாக பதிவு



தேசிய தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான ஸ்ரீலங்கா ரெலிகொம் குரூப் 2022ஆம் நிதியாண்டில் வருமானமாக ரூ.108 பில்லியனை பதிவுசெய்துள்ளது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2022ஆம் நிதியாண்டில் குழுமத்தின் வருமான அதிகரிப்பு 5.2 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்திருந்ததுடன், வரிக்குப் பிந்திய இலாபமாக ரூ.4,765 மில்லியனைப் பதிவுசெய்திருந்தது. பெரும் பொருளாதார மற்றும் தொழிற்துறைசார் சவால்களுக்கு மத்தியில் நிறுவனத்தினால் இந்த...

02 பக்கம்



# கல்வி அமைச்சுக்குள் நுழைந்து பிக்குகள், மாணவர்கள் போராட்டம்

## 56 பேர் பொலிஸாரால் கைது

ஹோமாகம பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்தை மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்காக உடனடியாக திறக்குமாறு வலியுறுத்தி, அனைத்து பல்கலைக்கழக பிக்கு ஒன்றியத்தினால் நேற்று முன்தினத்திலிருந்து ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றனர்.

இந்நிலையில், அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மற்றும் அனைத்து பல்கலைக்கழக பிக்குகள் ஒன்றியம் என்பன நேற்று (23) பத்தரமுல்லையில் அமைந்துள்ள கல்வி அமைச்சை சுற்றிவளைத்திருந்தனர். இதனால் அமைச்சில் அமைதியின்மை நிலவியது.

பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக கல்வி அமைச்சின் வளாகத்துக்கு பொலிஸார் அழைக்கப்பட்டிருந்தனர். அதனை தொடர்ந்து இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவு வழங்கிய அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தேசிய அமைப்பாளர் வசந்த முதலிகே உள்ளிட்ட 56 பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டிருந்தன.

களனி பல்கலைக்கழகத்துக்கு முன்பாக ஆரம்பித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் பேரணியாக கல்வி அமைச்சுவரை சென்றிருந்தார்கள். கல்வி அமைச்சின் வளாகத்தை முற்றுகையிட்டு, காவலாளர்களையும் மீறி அமைச்சுக்குள் சென்று கல்வி அமைச்சிலுள்ள அமைச்சரின் உத்தியோகபூர்வ அறைக்கு அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

மேலும், ஹோமாகமவிலுள்ள பாளி மற்றும் பௌத்த பல்கலைக்கழகத்தை திறக்குமாறு கோரி நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சத்தியாக்கிரகத்தின் மீது பொலிஸ் தாக்குதல் நடத்தியமைக்கு எதிராகவும் கல்வி அமைச்சின் வளாகத்தில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மருந்து மற்றும் மருத்துவ பொருட்களுக்கான தட்டுப்பாடு, அறுவை சிகிச்சைப் பிரிவுகளை முறைப்படுத்துதல், சுகாதார சேவையாளர்களுக்காக பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல் போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கொழும்பு தேசிய மருத்துவமனையின் சுகாதார சேவைப் பிரிவினர் நேற்று எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

அரசாங்கத்தின் வரிக்கொள்கையை நீக்குதல் உள்ளிட்ட கொடுப்பனவுகளை முறையாக பெற்றுக்கொடுக்குமாறும் அவர்கள் கோரிக்கை முன்வைத்திருந்தார்கள்.

### சனத் நிஷாந்தவுக்கு...

சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான அரச சட்டத்தரணி மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு இதனை அறிவித்தார்.

### சட்டத்தின் பிரகாரமே...

தேர்தல் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு நிதி வழங்கப்படாமையால் அது தொடர்பில் இறுதித் தீர்மானத்தை எட்டுவதற்கு தேர்தல் ஆணைக்குழு இன்று (24) கூடவுள்ளது.

### கோப், கோபாவுக்கு...

பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திசாநாயக்க பெயர் குறித்து நியமிக்கப்பட்டார்.

இந்தக் கூட்டத்தில் ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர்.

இதேவேளை, அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (கோப் தலைவராக ரஞ்சித் பண்டார நேற்று நியமிக்கப்பட்டுள்ளார். இராஜாங்க அமைச்சர் ஜகத் புஸ்ப குமாரவினால் அவரின் பெயர் முன்மொழியப்பட்டிருந்ததுடன், குழு உறுப்பினர்களிடம் மேற்கொள்ளப்பட்ட வாக்கெடுப்பின் பிரகாரமே அவர் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

### இராஜினாமா வேண்டாம்...

ஆக்கப்படப்போவது தமக்கும் தெரியும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார். பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மானை பாராளுமன்றத்தில் வைத்திருக்க முயற்சித்ததாக தெரிவித்த ஜனாதிபதி, இனிமேல் அது பற்றிப் பேசப்போவதில்லை என்றார்.

### தேர்தல் அறிவிப்பு...

நிதி குறித்த அதிகாரம் எங்களுக்கே இருக்கிறது.

தேர்தலை ஒத்திவைக்குமாறு எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் என்னிடம் கூறினார்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு இந்தத் தேர்தல் தேவையில்லை என்பதை நான் இங்கு கூறவிரும்புகிறேன். முடியுமாயின் தேர்தலை ஒத்திவையுங்கள். நாங்கள் கொஞ்சம் கூச்சலிட்டு, பின்னர் அமர்ந்துவிடுவோம் என்று எனக்கு செய்தி அனுப்பினார்கள்.

ஐ.ம.ச, ஹெலிகொப்டர், ஜே.வி.பியினர் தேர்தலை ஒத்திவைக்குமாறு கோரவில்லையா? இவர்கள் வழக்குத் தாக்கல் செய்தாலும் வழக்கை தொடர்ந்து முன்னெடுப்பது எப்படி என்று இவர்களுக்குத் தெரியாது. இங்கு கூச்சலிடும் அநேகர் தேர்தலை ஒத்திவைக்குமாறு என்னிடம் கூறினார்கள். இங்கு பதாதை உயர்த்திக் கொண்டிருக்கும் பலரும் தேர்தலை ஒத்திவைக்குமாறு என்னிடம் கேட்டார்கள்.

ஆனால் நான் தேர்தலை ஒத்திவைக்கவில்லை. காரணம், தேர்தலை நடத்த இன்னமும் ஆணைக்குழு திகதியொன்றை தீர்மானிக்கவில்லை. சட்டத்துக்கு புறம்பான வகையிலேயே தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது என்றார்.

தேர்தலுக்கு நிதி ஒதுக்கப்பட்டிருப்பது தொடர்பில் எதிர்த்தரப்பு பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த ஜனாதிபதி,

வரவு செலவுத்திட்டத்தில் 2 அல்லது 3 ட்ரில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. அவை முழுவதையும் ஒரேதடவையில் வழங்க முடியாது. குறித்த திகதியில் வழங்குமாறு எங்கும் குறிப்பிடப்படவில்லை. வருட இறுதிக்குள் அவற்றை செலவிடவேண்டும். செலவிட முடியாவிட்டால் திருப்பி அனுப்ப வேண்டும். வருமானம் வருமாக இருந்தால் செலவிடலாம். 4 டிரில்லியன் வரவேண்டிய நிலையில் ஒரு டிரில்லியன் தான் வருமானம் கிடைப்பதாக இருந்தால் ஒரு ட்ரில்லியன் தான் என்னால் செலவிட முடியும். மத்திய வங்கிக்கு அறிவித்து பணம் அச்சிடுவதாக இருந்தால் அது குறித்து பாராளுமன்றத்திடம் வினவ வேண்டும். ஆனால் சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தத்தின் பிரகாரம் பணம் அச்சிட முடியாது.

பணத்தை அச்சிட்டால் ஐ.எம்.எவ். உதவிகளைப் பெற முடியாது. எனவே, கையில் இருக்கும் பணத்திற்கமையவே வழங்க முடியும். அத்துடன் சுற்றுநிருபத்தின் மூலம் தேர்தலை ஒத்திவைக்க முடியுமா என்று கேட்கின்றனர். அப்படி செய்ய முடியாது. ஆனால் தேர்தல் ஒன்று அறிவிக்கப்பட்டால் மட்டுமே எதையாவது செய்ய முடியும். உத்தியோகபூர்வமாக மூன்று பேர் தீர்மானிக்க வேண்டிய இடத்தில் இருவர் மட்டுமே இருந்துள்ளனர். எனவே, எப்படி தேர்தலை நடத்த முடியும். இந்த அதிகாரிகள் பொறுப்புக்கூற வேண்டும். முதலில் தேர்தலை அறிவிக்க வேண்டும். நாம் சட்டத்தின்படியே பணியாற்றியுள்ளோம். சட்டத்தில் இருந்து வெளியே செல்லவில்லை என்றார்.

எஸ்.எம்.மரிக்கார் எம்.பி எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த ஜனாதிபதி,

தேர்தலுக்காக மரிக்கார் எம்.பி சத்தியாக்கிரகம் செய்ய வேண்டும். குரல் கொடுக்க வேண்டும். அதில் மாற்றுக் கருத்தில்லை என்றார்.

கபீர் ஹாசிம் எம்.பி எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த ஜனாதிபதி,

நான் பொருளாதாரத்திற்கே முன்னுரிமை வழங்குகிறேன். இதனை சீர்செய்யவில்லையெனில், நாடொன்று எஞ்சாது. நாட்டை இழந்து, அரசியலமைப்பைப் பாதுகாக்க முடியுமா என்று கேட்கவிரும்புகிறேன். நாட்டைப் பாதுகாத்தால் மட்டுமே அரசியலமைப்பைப் பாதுகாக்க முடியும். ஜனாதிபதியின் முதல்கடமை நாட்டைப் பாதுகாப்பதாகும். அவ்வளவுதான். அத்துடன், தேர்தல் ஆணைக்குழுவின் மூன்று அதிகாரிகளுடன் அமர்ந்து, தேர்தல் நடத்துவதற்கான தீர்மானத்தை எடுக்குமாறு கூறுங்கள். அப்படி செய்த பின்னரே எனக்கு பணம் தொடர்பான பிரச்சினை வரும். அப்படியொரு தீர்மானம் எடுக்கவில்லையெனில், அரசாங்கத்திற்கோ, எனக்கோ எந்தப் பிரச்சினையும் இல்லை என்றார்.

பொருளாதார நெருக்கடிக்கு தெரிவுக்குழுவொன்றை நியமிப்பது தொடர்பில் கபீர் ஹாசிம் எம்.பி எழுப்பிய மற்றொரு கேள்விக்குப் பதிலளித்த ஜனாதிபதி,

பாராளுமன்றத்தில் பிரேரணை ஒன்றை கொண்டு வந்தால் ஒத்துழைப்பு வழங்குவதாக கூறியிருந்தேன். கட்சித் தலைவர் கூட்டத்தில் தெரிவுக் குழுவொன்றை அமைக்குமாறு கேட்டீர்களா? இன்று கலந்துரையாடினால் அதற்காக திகதியொன்றை ஒதுக்குமாறு அறிவிக்கிறேன். எனக்கு அதில் எந்தப் பிரச்சினையும் கிடையாது என்றார்.

ஹர்சன ராஜகருணா எம்.பி எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த ஜனாதிபதி,

மார்ச் 3ஆவது வாரம் இது தொடர்பான பிரேரணையை முன்னெடுக்குமாறு பிரதமருக்கு அறிவித்துள்ளேன். நான் தான் இவர்களை கொண்டு வந்தேன். எனது மூளையை பயன்படுத்தித்தான் செயற்பட்டேன். ஆனால் இவர்களுக்கு அவ்வாறு செயற்பட மூளையும் கிடையாது. அதிகாரமும் கிடையாது என்றார்.

ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் ஆகியவற்றையும் ஒத்திவைக்கும் தீர்மானத்தில் உள்ளீர்களா என இராசமாணிக்கம் சாணக்கியன் எம்.பி எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த ஜனாதிபதி,

நாட்டின் அரசியலமைப்பின் பிரகாரம் அனைத்து தேர்தல்களையும் உரிய நேரத்தில் நடத்துவோம் என்று தெரிவித்தார்.

### அரசியல் வலையில்...

முகப்புத்தக பதிவொன்றை வெளியிட்டே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அரசாங்கக் கணக்குக் குழு பாராளுமன்றத்திலிருக்கும் முக்கியமான குழுவாகும். பாராளுமன்றத்திருக்கும் நிதி அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் சாவி இந்த குழுவிடமே இருக்கிறது. அதனால், இந்த குழுவுக்கு இருக்கும் முக்கியத்துவம் குறித்து எனக்கிருக்கும் ஆழமான புரிதல் இருப்பதுடன், நான் இந்தக் குழுவின் தலைமைத்துவத்தை ஏற்றதன் பின்னர் யோசனையொன்றை பகுப்பாய்வு ரீதியாக முன்வைக்கப்படாத சந்தர்ப்பத்தில் அதற்கு அனுமதி வழங்க இடமளிக்கவில்லை.

வங்குரோத்து நிலையை சந்தித்துள்ள நாட்டிலுள்ள மக்களின் நிதியை அதிகப்பட்சம் அவர்களின் தேவைகளுக்காக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் நம்புகிறேன்.

என்னை அரசாங்கக் கணக்குக் குழுவிலிருந்து சட்டத்துக்கு முரணாக நீக்கி, மக்களின் சொத்துக்களை திருடுவதற்காகவே இந்த கொள்ளையர்கள் குழு நுழைந்துள்ளது என்பது தெளிவாக தெரிகிறது. நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் செயலாற்றிய என்னை அரசியல் வலைக்குள் சிக்க வைத்தமை தொடர்பில் கவலைக்கொள்கிறேன். இருந்தபோதும், இவர்களை தோற்கடிப்பதற்கு ஏனைய நாட்களை விட தீவிரமாக செயற்படுவேன்.

இந்தக் குழுவின் தலைவராக இருப்பதற்கான சகல தகுதியும் எனக்கு இருக்கிறது என்பது தெரியும். ஆனால், திருடர்களுக்கு இடமளிக்காமையே என்னை வெளியேற்றியமைக்கு பிரதான காரணமாகும் என்று சுட்டிகாட்டியுள்ளார்.

### பாராளுமன்றத்தில்...

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் நேற்று (23) விசேட உரை நிகழ்த்தியபோது எதிர்க்கட்சியினர், தேர்தலை உரிய நேரத்தில் நடத்துமாறுகோரியும் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் எதிர்ப்பு தெரிவித்தும் பதாதைகளை ஏந்திய வண்ணம் சபையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

எதிர்க் கட்சியினரின் ஆர்ப்பாட்டத்தை தொடர்ந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சபையிலிருந்து வெளியேறியிருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

தேர்தல் வேண்டும், தேர்தலை காலந்தாழ்த்த வேண்டாம் போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை எதிர்க்கட்சியினர் ஏந்தியிருந்தனர்.

மேலும், இதன்போது மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவரும் சபைக்கு வருகைதந்திருக்கவில்லை.

### தேர்தல் தொடர்பான...

முன்னெடுத்துச் செல்ல வேண்டுமெனவும் ஆணைக்குழுவின் நிலைப்பாட்டில் மாற்றுக்கருத்துகள் இல்லையெனவும் மன்றில் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் வாக்குச் சீட்டுகளை அச்சிடுவதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் மற்றும் தேர்தலுக்கான நிதியை திறைசேரி பெற்றுக்கொடுக்காமை காரணமாக தேர்தலை நடத்துவதில் தடைகள் ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

திறைசேரியின் செயலாளர் சார்பில் மன்றில் ஆஜராகியிருந்த மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரின் புள்ளே, வாக்குமூலத்தின் அடிப்படையில் சமர்ப்புகளை முன்வைத்தார். தேர்தலுக்கு நிதி வழங்குவதற்கு ஆலோசனைகள் அவசியம் எனவும் மன்றில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே எதிர்வரும் மே மாதம் 11ஆம் திகதிவரை வழக்கை ஒத்திவைப்பதாக நீதிமன்றம் அறிவித்தது.

### தேர்தல் செலவு...

ரோஹண ஹெட்டியாராச்சி கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இதுவரையில் தேர்தலுக்காக மக்களின் பணத்தில் 5 ஆயிரம் இலட்ச ரூபா வரையில் செலவு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறாயின் தேர்தலை நடத்த முடியாதவொரு நிலை ஏற்படுமாக இருந்தால், நாட்டில் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமையில் மக்களின் நிதி இவ்வாறு செலவு செய்து அதன் பிரதிபலனை பெற்றக்கொள்ளமுடியாவிட்டால், அதற்கான பொறுப்பை ஏற்பது யார்?

அரசியல் தலைமையை வழங்கியவர்கள் இதற்கான பொறுப்பை ஏற்பார்களா? அல்லது தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்காத அரச உத்தியோகத்தர்கள் பதிலளிப்பார்களா? ஒருபுறம் நாட்டில் பொருளாதார நெருக்கடி இருக்கிறது என்று கூறிக் கொள்கிறோம். மறுபுறம் எம்மால் எடுக்கப்படும் பொறுப்பற்ற தீர்மானங்களினால் மக்களின் பணம் வீணடிக்கப்படும் என்றார்.

இதேவேளை, நேற்று முன்தினம் (22) பெவ்ரல் அமைப்பு தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா உள்ளிட்ட உறுப்பினர்களுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது.

அந்தக் கடிதத்தில்,

எதிர்வரும் மார்ச் 09ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், அரச அதிகாரிகள் தேர்தலை நடத்துவதற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்பட்டுவருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. அவ்வாறு இருக்கையில், அரசியலமைப்பினூடாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கமைய ஆணைக்குழு எடுத்துள்ள நடவடிக்கை அவ்வாறு இல்லாவிட்டால் எதிர்காலத்தில் எடுக்கவிருக்கும் நடவடிக்கை குறித்து தமக்கு தெரியப்படுத்துமாறு கோரப்பட்டுள்ளது.

### பிரபாகரன்தான்...

தெரிவிக்கையில்,

காட்டிலுள்ள மிருகங்களில் நரி எவ்வாறு தந்திரமிக்க மிருகமாக கருதப்படுகின்றதோ அதே போன்று தான் எமது நாட்டில் இருக்கும் மிக தந்திரோபாயமான மனிதராக ஜனாதிபதி ரணில் அடையாளப்படுத்தப்படுகின்றார். அவர் ஜனநாயக ரீதியாக கருத்துகளை வெளியிடுவதாகத் தெரியவில்லை. பொருளாதார பிரச்சினைகளுக்கு எந்தவொரு தீர்வையும் வழங்காமல், தொடர்ச்சியாக பாராளுமன்றத்தில் உரையாற்றுவதனூடாக பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று ஜனாதிபதி நம்புவது மோசமான நிலைமையாகும்.

ரணில் விக்கிரமசிங்க எப்படி இலங்கையில் பிறந்தார் என்று மக்கள் வியப்புடன் இருக்கிறார்கள். ஜனநாயகம் தொலைக்கப்பட்டு, நீதி இல்லாமல் செய்யப்பட்டு மக்களின் கௌரவம் அடகு வைக்கப்பட்டுள்ளது. எமது பாராளுமன்றம் கோமாளிகளின் கூடாரமாக மாறிவிட்டது. இந்த சபை மக்களுக்காக என்ன செய்கிறது? இங்கே எடுக்கப்படும் தீர்மானங்கள் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றன என்றால் அதற்கு பதில் இல்லை. சோறு கொடுக்கும் விவசாயிகள் தெருவுக்கு வந்திருக்கிறார்கள். விவசாயிகளின் பிரச்சினைக்கு எந்தத் தீர்வும் பெற்றுக் கொடுப்பதாகத் தெரியவில்லை. அவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் விவசாயிகள் ஜனாதிபதிக்கு கடிதமொன்றையும் அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

தேர்தல் அறிவிக்கப்படவில்லை, தேர்தலை நடத்த நிதியில்லை என்று நாட்டின் தலைவர் முட்டாள்தனமான கருத்துகளையே சபையில் முன்வைக்கிறார். முதலில் ஆட்சி செய்பவர்கள் உறுதியான நிலைப்பாட்டுக்கு வரவேண்டும்.

இதனை தொடர்ந்து சபையில் கருத்து தெரிவித்த அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ,

சிறீதரன் எம்.பியின் கூற்றுப்படி வடக்கு பிரதேசங்களிலுள்ள கடந்த இரு வருடங்களிலேயே வடக்கு விவசாயிகளின் விவசாய நிலங்கள் அழிவடைந்துள்ளதாகவும், இந்தக் காலப்பகுதியிலேயே அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக பொருள்படுகின்றது. உண்மையில் வடக்கு மக்களுக்கு சிறந்த விவசாய முன்னெடுப்புகள் இருந்தன. அந்த அனைத்தும், பிரபாகரனால் முன்னெடுக்கப்பட்ட பலவந்தமான போரினாலேயே அழிக்கப்பட்டன. அவர்கள் கோரும், அவர்களின் தலைவராக கருதும் பிரபாகரனின் நிர்வாகத்தினாலேயே வடக்கு மக்களின் வாழ்க்கை அழிக்கப்பட்டது. அவ்வாறிருக்கையில், இந்த விடயத்தை முன்னாள் தலைவர்கள் மீதும் தற்போதுள்ள தலைவர்கள் மீதும் சாட்டுவது தவறாகும். அதனூடாக நாட்டுக்கு தவறான கருத்தையே கொண்டு சேர்க்கிறார்கள். எனவே, பாராளுமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் பொறுப்புடன் கருத்துகளை முன்வைக்க வேண்டும் என்று கூறினார்.

அதற்கு பதிலளித்த சிறீதரன் எம்.பி,

நீங்கள் தற்போதும் பிரபாகரனை மறக்கவில்லை. நாங்களும் எங்களின் வாழ்நாள் முழுவதும் மறக்கமாட்டோம். எங்கள் தலைவர் பிரபாகரனே. உங்களாலும் அவரை மறக்க முடியாது. அதற்கு காரணம் பிரபாகரன் நேர்மையான, கன்னியமான மனிதர். நாட்டுக்குத் தேவையான அரிசி தொடர்பிலேயே எனது நிலைப்பாட்டை வெளியிட்டேன். ஜனாதிபதி கிளிநொச்சி பிரதேசத்துக்கு வந்து படம் காட்டினாரே தவிர, அங்கு 100 ரூபாவுக்கு கூட நெல் கொள்வனவு செய்யப்படவில்லை.

அமைச்சர் என்ற வகையில் பொய்யான தகவல்களை பரப்பக்கூடாது. பொறுப்புள்ள அமைச்சர் என்ற அடிப்படையில் இனவாதத்தை கொட்டக்கூடாது. போர் முடிந்து 13 வருடங்கள் நிறைவடைந்துவிட்டன. நாட்டில் தற்போது என்ன நடக்கிறது. இப்போதும் பிரபாகரனை காரணங்காட்டக்கூடாது. தயவுசெய்து சிந்தித்து செயலாற்ற வேண்டும். படித்தவர்கள் நீங்கள். முட்டாள்களைப்போன்று செயற்படாதீர்கள் - என்றார்.

### மரணதண்டனைக்கான...

நீதியரசர்கள் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இலங்கையின் எந்தவொரு நீதிமன்றமும் மரணதண்டனையை நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதி கையொப்பமிடப் போவதில்லையென தீர்மானித்துள்ளதாக இதன்போது சட்டமா அதிபரால் நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து மனுதாரர் சார்பில் ஆஜராகிய ஜனாதிபதி சட்டத்தரணிகள் மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணிகளின் வேண்டுகோளுக்கிணங்க, வழக்கு நடவடிக்கைகள் தற்காலிகமாக தள்ளுபடி செய்யப்பட்டன. அத்துடன் தேவை ஏற்படின் வழக்கை மீள விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கும் உயர் நீதிமன்ற நீதியரசர் குழு கட்டளை வழங்கியது.

சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசாவின் சட்ட நிறுவனத்தினால் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜெயவர்தன, சிரேஷ்ட சட்டத்தரணி புலஸ்தி ஹேவமான்னி, சட்டத்தரணிகளான தர்மராஜா தர்மஜா, தர்சிகா தர்மராசா ஆகியோர் முன்னிலையாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### ரெலிகொம் வருமானம்...

உயர்ந்த பெறுபேறுகளை எய்த முடிந்திருந்தமை விசேட அம்சமாகும்.

2021ஆம் ஆண்டில் குழுமம் முன்னெடுத்திருந்த மாற்றங்களுடனான பயணத்தினூடாக, குழுமத்தினால் இந்தப் பெறுபேறுகளை எய்தக் கூடியதாக இருந்தது. குறிப்பாக ஒன்றிணைக்கப்பட்ட வியாபாரக் கட்டமைப்பு, வசதிகள் மற்றும் வர்த்தக நாம ஒன்றிணைப்பினூடாக செலவுச் சிக்கனமான செயற்பாடுகள் போன்றவற்றினூடாக, தொழிற்பாட்டு வினைத்திறனில் கவனம் செலுத்த முடிந்திருந்தது.

ஸ்ரீலங்கா ரெலிகொம் தவிசாளர் ரொஹான் பெர்னாண்டோ கருத்துத் தெரிவிக்கையில், "2022ஆம் ஆண்டு என்பது நாம் இதுவரையில் அனுபவித்திராத பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகள் நிறைந்த ஆண்டாக அமைந்திருந்தது. கடினமான தொழிற்பாட்டு சூழலிலும், எமது தொழிற்துறைக்கு உரித்தான பல சவால்களுக்கு மத்தியிலும், எமது பிரதான வியாபார செயற்பாட்டினுள் புத்தாக்கங்களை உள்வாங்கி, செலவுச் சிக்கனமான செயற்பாடுகளை மேற்கொள்ள முடிந்ததையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். அதேவேளை, இந்த நெருக்கடியான சந்தைச் சூழலில் இயங்க வேண்டிய முறையை பயின்று செயலாற்றியிருந்தமையானது, எம்மை உறுதியான நிலைக்கு கொண்டு செல்ல உதவியிருந்தது. முன்னேற்றகரமான எந்த வியாபாரத்தையும் போன்று, மாற்றியமைக்கப்பட்ட செயற்பாடு என்பது வளர்ச்சிக்கும், சந்தையில் நிலவும் சவால்களை கடந்து செல்வதற்கும் உதவியாக அமைந்திருப்பதுடன், வியாபார நிலை பேறாண்மையை எய்துவதற்கும், எதிர்காலத்துக்குதயாரான பணியாளர் குழாமை கட்டியெழுப்பவும் உதவியாக அமைந்திருக்கும். தொடர்பாடல் சேவைகளை வழங்கும் நிறுவனம் என்பதிலிருந்து, தொழில்நுட்ப (தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல்) சேவைகளை வழங்கும் நிறுவனமாக எம்மை மாற்றியமைக்கும் நோக்குடன் செயலாற்றுவதில் நாம் உறுதியாக பயணிப்பதுடன், அதனூடாக எமது வாடிக்கையாளர்களுக்கும், முதலீட்டாளர்களுக்கும் நவீன தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கவும், நாட்டின் முக்கிய தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சிக்கு ஆதரவளித்து, சமூகப் பொருளாதார முன்னேற்றத்துக்கு பங்களிப்பு வழங்கவும் எதிர்பார்த்துள்ளோம். வியாபார மீட்சி, முகாமைத்துவ தீர்மானங்கள் மற்றும் 10ஆயிரத்துக்கும் அதிகமான எமது உறுதியான ஊழியர் குழுவின் ஆற்றல்கள் போன்றவற்றினூடாக எமக்குக் காணப்படும் வாய்ப்புகளினூடாக நெருக்கடியான கடினமான சூழலிலும் எம்மால் சிறந்த வகையில் இயங்கக்கூடியதாக இருக்குமெனக் கருதுகின்றோம்" என்றார்.

நிறுவன மட்டத்தில், SLT இன் நான்காம் காலாண்டு வருமானங்கள், முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 19.9 வீதத்தினால் உயர்வடைந்து, ரூ. 18.1 பில்லியன் அதிகரிப்பைப் பதிவு செய்திருந்தது. கடந்த ஆண்டில் பதிவாகியிருந்த முழு வருமானத்துடன் ஒப்பிடுகையில் 13 வீத வளர்ச்சியுடன், ரூ. 67.6 பில்லியனாக பதிவாகியிருந்தது.

இதன் பெறுபேறாக, 2022 நிதியாண்டில் ரெலிகொம் நிறுவனம் உறுதியான வரிக்குப் பிந்திய இலாபமாக ரூ. 8,463 மில்லியனை பதிவு செய்திருந்தது. இது, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 44.3 வீத அதிகரிப்பாகும்.

### சிவனொளிபாதமலையில்...

***(செ. தி. பெருமாள்)***

இம்முறை சிவனொளிபாதமலை பருவ காலம் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் நேற்று முன்தினம்(22) தரிசனம் செய்வதற்காக வருகைதந்த யாத்திரிகர்கள் விட்டுச்சென்ற 8 தொன் எடையுள்ள உக்கா கழிவுப் பொருட்கள் அனைத்தையும் அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டதாக மஸ்கெலியா பிரதேச சபையின் செயலாளர் சிவராம் ராஜவீரன் தெரிவித்தார்.

சிவனொளிபாத மலைக்கு தரிசனம் செய்ய 03 இலட்சம் யாத்திரிகர்கள் கடந்த வாரம் வருகைதந்த நிலையில் நல்லதண்ணியில் உள்ள வீதியின் இரு பகுதிகளும் காணப்பட்ட இந்தக் கழிவுகள் அகற்றப்பட்டு ரிக்காடன் கிராமத்தில் உள்ள கழிவுகள் சேகரிக்கும் நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, ஒவ்வொரு வருடமும் சிவனொளிபாதமலை பருவ காலங்களில் குப்பைகள் மற்றும் ப்ளாஸ்ரிக் பொருட்களை அகற்ற பல இலட்ச ரூபா பணம் விரயம் செய்ய வேண்டியுள்ளது. அந்தப் பணம் மஸ்கெலியா பிரதேச சபைக்கு பாரிய இழப்பாகும்.

இந்த விலை மதிப்பற்ற புனித பூமியை எதிர்கால சந்ததிக்காக விட்டுச் செல்ல வேண்டும் எனவும் இனிவரும் காலங்களில் யாத்திரிகர்கள் வருகை தரும்போது ப்ளாஸ்ரிக் பொருட்கள் மற்றும் பொலித்தீன் உள்ளிட்ட ஏனைய கழிவு பொருட்களை சிவனொளிபாதமலைக்கு கொண்டுவருவதை தவிர்க்க வேண்டும் என்றார்.

## தினசரி பலாபலன்கள்

**சுபகிருது வருடம் மாசி மாதம் 12ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**மேஷம்** மன உளைச்சல் இருக்கும், செலவுகளை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ளுங்கள்.

**ரிஷபம்** வீண் மனக்கவலைகள் வேண்டாம், எல்லாம் நல்லதற்கே என்று நினைத்து அமைதி கொள்ளுங்கள்.

**மிதுனம்** உடல், மனம் அமைதியாக இருக்கும், நினைத்ததை இன்று சாதிப்பீர்கள். தன வரவு உண்டு.

**கடகம்** பயணங்கள் அதிகரிக்கும், உடல் நோய்களைப் பார்த்துக்கொள்ளுங்கள், தொழிலில் சாமாளிப்பீர்கள்.

**சிம்மம்** சுப செய்திகளால் மன மகிழ்ச்சி அடைவீர்கள், கடவுள் வழிபாட்டில் மனதை செலுத்துவீர்கள்.

**கன்னி** மௌனம் காப்பது அவசியம், நீங்களே உங்கள் மனதை கெடுத்துக்கொள்வீர்கள்

**துலாம்** காதல் சுற்றுலா செல்வீர்கள், ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள், பெண்கள் உதவுவார்கள்.

**விருச்சகம்** வீண் டென்ஷன் வேண்டாம், தேவையற்ற கோபங்களால் மனக் குழப்பம் உண்டு.

**தனுசு** தெளிந்த மனதுடன் இன்று அனைத்தையும் சாதிப்பீர்கள், குழந்தைகளால் நன்மையும் புகழும் உண்டு.

**மகரம்** நீங்கள் நினைத்த பயணத்தால் மகிழ்ச்சியும் லாபமும் அடைவீர்கள், தாய்வழி உதவிகள் உண்டு.

**கும்பம்** சதோதர வகையில் நன்மை உண்டு, தைரியத்துடன் சவால்களை வெற்றிகொள்வீர்கள்.

**மீனம்** ஞாபக மறதியால் அவதி படுவீர்கள், மனதில் எண்ணற்ற சிந்தனைகள் அலைபாய்ந்தவண்ண மிருக்கும்.

**திதி** : பஞ்சமி பி.இ. 12.31 வரை பின் ஷஷ்டி

**நட்சத்திரம்** : அச்சுவினி பி.இ. 3.26 வரை பின் பரணி

**யோகம்** : அமிர்தசித்த யோகம் (சுப காரியம் நன்மை)

**வார சூலை** : தென் கிழக்குத் திசை நோக்கி சுப காரியம் கூடாது

**நல்ல நேரம்** : மு.ப. 6.28 -7.28 மணி வரை

**ராகு காலம்** : 10.58 – 12.28 மணி வரை

**எமகண்டம்** : 3.28 - 4.58 மணி வரை

**குளிகை** : 7.58 - 9.28 மணி வரை

**சந்திராஷ்டமம்** : கன்னி ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்

**தன அதிஷ்டம்** : ஆயில்யம், கேட்டை, ரேவதி (பிறந்தவர்களுக்கு)

**விஷேட தினம்** : ------

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
**(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)**
**ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.**
**தொலைபேசி : 077-0525325**
**078-6759739**

# மத்திய கிழக்கில் உண்மையான அமைதியை ஏற்படுத்த இலங்கைக்கு குவைத் அழைப்பு








**றிப்தி அலி**

மத்திய கிழக்கில் உண்மையான அமைதியை ஏற்படுத்துவதற்காக அரபு நாடுகள் முன்னெடுத்துள்ள முயற்சிக்கு இலங்கை தொடர்ச்சியான ஒத்துழைப்பை வழங்கவேண்டுமென குவைத் அழைப்பு விடுத்துள்ளது.

"எங்களின் நட்பு நாடு என்றவகையிலேயே இலங்கையிடம் இந்தக் கோரிக்கையை முன்வைக்கின்றோம்" என இலங்கைக்கான குவைத் தூதுவர் கலஃப் பு தைர் தெரிவித்தார்.

குவைத்தின் 52ஆவது தேசிய தினம் மற்றும் 32ஆவது விடுதலை தினம் ஆகியவற்றின் நிகழ்வு நேற்று முன்தினம் (22) கொழும்பில் இடம்பெற்றது. இதன்போது உரையாற்றுகையிலேயே குவைத் தூதுவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய இலங்கைக்கான குவைத் தூதுவர் கலஃப் பு தைர்,

"பலஸ்தீன மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு குவைத் பாரிய பங்கு வகித்து வருகின்றது. அத்துடன், சவூதி அரேபியாவின் முன்னாள் மன்னர் அப்துல்லாஹ் பின் அப்துல் அஸீஸினால் 2002ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அரபு நாடுகளின் முயற்சியின் முக்கியத்துவத்தையும் நாம் வலியுறுத்துகின்றோம்.

அத்துடன், இரு நாடுகளின் தீர்வு, சர்ச்சை, பலஸ்தீனத்தின் தலைநகரான கிழக்கு ஜெரூஸலத்தில் 1967.06.04ஆம் திகதிவரை ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தில் பலஸ்தீன் அரசை உருவாக்கல் போன்ற பலஸ்தீன் மக்களின் நியாயமான உரிமைகளையும் நாம் வலியுறுத்துகின்றோம்.

சர்வதேச மற்றும் பிராந்திய கொள்கை நிபந்தனைகளின் அடிப்படையில் அமைதியை கட்டியெழுப்பவும், நாடுகளுக்கு இடையிலான முரண்பாடுகளை தீர்க்கவும் குவைத் பாரிய பங்காற்றி வருகின்றது.

அது மாத்திரமல்லாமல், சர்வதேச சமூகத்தில் மிகவும் சுறுசுறுப்பான நாடு என்றவகையில் சர்வதேச சமாதான முயற்சிகளுக்குத் தேவையான பங்களிப்பையும் குவைத் வழங்கி வருகின்றது. இந்த அடிப்படையிலேயே பலஸ்தீன மக்களுக்காக குவைத் தொடர்ச்சியாக குரல் கொடுத்து வருகின்றது.

இலங்கை போன்ற நட்பு நாடுகளுடன் இணைந்து மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள பிரச்சினையைத் தீர்க்க குவைத் போராடி வருகின்றமையை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

குவைத்துக்கும் இலங்கைக்கும் இடையிலான இரு தரப்பு உறவை எப்போதும் வலுப்படுத்த இரு நாடுகளும் தயாராகவே உள்ளன.

அரசியல், பொருளாதாரம், சுகாதாரம் மற்றும் கலாசாரம் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் இரு நாடுகளுக்கும் இடையில் 52 வருடங்களுக்கு முன்பே இராஜதந்திர உறவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

மேற்காசியாவின் சிறிய நாடான குவைத், உள்ளூர், பிராந்திய மற்றும் சர்வதேச ரீதியில் அடைந்துள்ள சாதனைகளை இந்த நிகழ்வில் ஞாபகமூட்டுகின்றேன். ஆட்சியாளருக்கும் மக்களுக்கும் இடையிலான சமூக ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே எமது நாட்டின் அரசியலமைப்பு 1962இல் வரையப்பட்டது.

இதனூடாக மக்கள், அவர்களின் அரசியலமைப்பு, உரிமைகள் மற்றும் கடமைகளை ஜனநாயக அரசியலமைப்பின் அடிப்படையில் நாட்டின் நிலைத்தன்மையை உறுதிப்படுத்தவும் அதன் தேசிய பாதுகாப்பு மற்றும் சமூக அமைதியைப் பாதுகாக்கவும் பெற்றுக்கொண்டனர்.

இதனால், சர்வதேச அளவில் கரீபியன் மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகள் உட்பட ஆசியா முதல் ஆபிரிக்கா வரை அனைத்து நாடுகளுடனும் குவைத் நட்புறவைப் பேணி வருகின்றது.

அது மாத்திரமல்லாது, 1961ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அரபு பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியத்தின் மூலம் சர்வதேச ரீதியாக பல உதவிகளை குவைத் முன்னெடுத்து வருகின்றது. இதுவரை 105 நாடுகளுக்கு இந்த நிதியத்தால் சேவைகள் வழங்கப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகளின் அமைப்புகளுக்கும் அதன் பல்வேறு நிதியங்களுக்கும் முக்கிய உதவியாளர்களின் ஒருவராக குவைத் இருந்து வருகின்றது. குறிப்பாக, இயற்கை அனர்த்தம், தொற்றுநோய்கள் மற்றும் போர்களின் விளைவுகள் போன்றவற்றை உலக நாடுகள் எதிர்நோக்குகின்ற சமயத்தில் குவைத் பாரிய உதவிகளை வழங்கி வருகின்றது. அத்துடன், சிறிய மற்றும் வளர்ச்சியடைந்த நாடுகளின் பொருளாதாரங்களுக்கும் உதவி வழங்கி வருகின்றது" என்றார்.

இந்த நிகழ்வில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேயவர்தன, அமைச்சர்களான அலி சப்ரி, மனுஷ நாணயக்கார, இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**படங்கள்: ருசைக் பாறூக்**

## மொனராகலை சிறையிலிருந்து கைதி ஒருவர் தப்பியோட்டம்

**(கெலும் குணதிலக்க)**

மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையில் பொலிஸ் காவலில் சிகிச்சைபெற்றுவந்த மொனராகலை சிறைச்சாலையின் கைதி ஒருவர் நேற்று முன்தினம் (22) இரவு சிறைச்சாலை அதிகாரிகளிடமிருந்து தப்பிச் சென்றுள்ளதாக மொனராகலை பொலிஸார் தெரிவித்தனர்.

தகராறு ஒன்றில் ஈடுபட்டதாக தெரிவித்து, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இந்த கைதி மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையின் 09ஆம் வார்டில் சிகிச்சைபெற்று வந்துள்ளார். இரவு உணவிற்காக கைவிலங்கு கழற்றப்பட்டு, கைதி சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது காவலர்கள் இருவரும் நின்றுகொண்டிருந்தனர், ஆனால் கைதி உடனடியாகதப்பிவிட்டார். கைதுசெய்யப்பட்டவர் வெல்லவாய கொன்வெலன பிரதேசத்தில் வசிக்கும் 37 வயதுடையவராவார்.

மொனராகலை சிறைச்சாலையினரும் பொலிஸாரும் அவரை கைதுசெய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

## வாகன உதிரிப்பாகங்களின் விலை உயர்வு

வாகன உதிரிப்பாகங்களின் விலை 300 சதவீதத்துக்கும் மேல் உயர்த்தப்பட்டுள்ளதால், வாகன உரிமையாளர்கள், வாகன பழுதுபார்ப்பவர்கள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகியுள்ளனர்.

உதிரிப்பாகங்கள் இறக்குமதிக்கான கடனுதவியை வங்கி வழங்க முடியாமல் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் டொலரின் பெறுமதி வீழ்ச்சியால் இறக்குமதி செய்யப்பட்ட உதிரிப்பாகங்களின் விலையும் பல மடங்கு அதிகரித்துள்ளதாகவும் கொழும்பு பஞ்சிகாவத்த வாகன உதிரிப்பாக விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஜப்பானில் தயாரிக்கப்பட்ட வாகனங்களின் உதிரிப்பாகங்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்த ஐந்து வாகன உதிரிப்பாக விற்பனையாளர்கள், உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்வதால் வாகன உரிமையாளர்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

ஆறு மாதங்களுக்கு முன் 12 ஆயிரம் முதல் 15 ஆயிரம் ரூபாவரை விற்பனை செய்யப்பட்ட என்ஜின் மவுண்ட், தற்போது 45 ஆயிரம் முதல் 50 ஆயிரம் ரூபாவரை உயர்ந்துள்ளதாகவும், ஒரு வாகனத்தில் மூன்று அல்லது நான்கு என்ஜின் மவுண்ட்கள் இருப்பதாகவும் உதிரிப்பாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

ஐரோப்பிய நாடுகளில் வாகனங்களுக்கான உதிரிப்பாகங்களுக்கு அதிக தட்டுப்பாடு இல்லையென்றாலும், அதிகளவில் பயன்படுத்தப்படும் புதிய மற்றும் பழைய ஜப்பானிய வாகனங்களுக்கான உதிரிப்பாகங்களுக்கு கடும் தட்டுப்பாடு இருப்பதுடன், அதிக விலை உயர்வும் உள்ளதாக அவர்கள் மேலும் குறிப்பிடுகின்றனர்.

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் யாழில் ஏற்பாடுசெய்த பிரசாரக் கூட்டத்தில் கட்சியின் பெயரால் சர்ச்சை




எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச யாழில் ஏற்பாடு செய்திருந்த பிரசாரக் கூட்டத்தில் வைக்கப்பட்டிருந்த கட்சிப் பதாகையில் 'ஐக்கிய மக்கள் சக்தி' என்ற பெயர் 'ஐக்கிய மக்கள் கட்சி' என்று குறிப்பிடப்பட்டிருந்தமை மக்கள் மத்தியில் பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ளது.

தேர்தல் பிரசாரக் கூட்டத்திற்காக இரண்டு நாட்கள் எதிர்க்கட்சித் தலைவர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ளார்.

அந்தவகையில் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் அவரது தேர்தல் பிரசாரக் கூட்டம் இடம்பெற்று வருகிறது. யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய், கொம்பனிப்புலம் பகுதிகளிலும் அவரது பிரசாரக் கூட்டம் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது.

அந்தக் கூட்டத்தில் மேடையின் பின்புலத்தில் கட்டப்பட்டிருந்த கட்சிப் பதாகையில் 'ஐக்கிய மக்கள் சக்தி' என்ற பெயர் 'ஐக்கிய மக்கள் கட்சி' என குறிப்பிடப்பட்டிருந்தது.

இவ்வாறான செயற்பாட்டை பார்வையிட்ட மக்கள், "கட்சியின் பெயர் மாற்றப்பட்டுள்ளதா?, கட்சியின் பெயரே தெரியாதவர்கள் தேர்தலில் வெற்றிபெற்று மக்களுக்கு என்ன செய்வார்கள்" என முணுமுணுத்ததை அவதானிக்க முடிந்தது.

அத்துடன், குறித்த பிரசாரக் கூட்டம் பிற்பகல் 2 மணிக்கு என அறிவிக்கப்பட்டிருந்தபோதும் கட்சித் தலைவர் சஜித் 3.30 மணிக்குப் பின்னரே கூட்டத்தில் பங்குபற்றினார். இதனால் கூட்டத்திற்கு வந்த மக்கள் காத்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

## யாழ். ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக அமைச்சர் டக்ளஸ் நியமனம்

### கிளிநொச்சியின் பதில் தலைவராகவும் செயற்படுமாறு வேண்டுகோள்

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவராக ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமான கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை, வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவராக ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இருவருக்குமான நியமனக் கடிதத்தை பிரதமர் தினேஷ் குணவர்தன நேற்று (23) வழங்கினார்.



அதேவேளை, கடந்த காலங்களில் கிளிநொச்சி மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா செயற்பட்டிருந்த நிலையில், தற்போதைய அரசாங்கத்தின் வேலைத் திட்டங்களையும் கொள்கையையும் புரிந்து கொண்டு, அதனை வலுப்படுத்தும் வகையில் செயற்படக்கூடிய பொருத்தமான ஒருவர் நியமிக்கப்படும் வரையில் கிளிநொச்சி மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுவிற்கான பதில் தலைவராகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை செயற்படுமாறு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## செலான் வங்கி பீ.எல்.சி.

(2007-07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் குறிப்பு P.Q.9 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டது)

1990ஆம் ஆண்டு 04ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 04ஆம் பிரிவின் கீழ் செலான் வங்கி பீ.எல்.சீ.இன் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானம்.

இத்தால் அறியத்தரப்படுவதாவது 1990ஆம் ஆண்டு 04ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 08ஆம் பிரிவின் கீழ் 2023/01/24ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் செலான் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர் சபையினரால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டுள்ளதாவது.

**கிளை** :**கொட்டாவ**
**கணக்கு இலக்கம்** :**0330-12938198-078**

(2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் கம்பனி பதிவு இலக்கம்: P.Q.9இன் கீழ் பதிவு செய்யப்பட்ட) செலான் வங்கி பீ.எல்.சீ இன் சார்பில் பிரசித்த நொத்தாரிசு ரீ.ஏ.என்.என்.தென்னகோன் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2019 செப்டெம்பர் 30ஆம் திகதியிடப்பட்ட 2123ஆம் இலக்க பிணைமுறியின் கீழ் செலுத்தப்படாமல் நிலுவையாக நிற்கும் தொகையை "கடன் பெற்றவரான/அடகுவைத்தவரான" ஹோமாகமவைச் சேர்ந்தவரான **வன்னிநாயக்கே முதியான்சேலாகே கயான் எரங்க வன்னிநாயக்க** என்பவரால் செலுத்தத் தவறியுள்ளமையால் குறித்த பிணை முறியின் மீது பெறப்பட்ட தவணை கடன் வசதிக்காக 2022 டிசம்பர் 19ஆம் திகதி வரை அசல் மற்றும் வட்டித் தொகையாக ஆறு மில்லியன் எழுநூற்று நாற்பத்தெட்டாயிரத்து எண்ணூற்று நாற்பத்தொன்பது ரூபா எழுபத்தேழு சதத்(ரூ.6,748,849,77) தொகையை மற்றும் 2022 டிசம்பர் 20ஆம் திகதி தொடக்கம் ஆறு மில்லியன் நானூற்று ஓராயிரத்து ஐம்பத்தைந்து ரூபா முப்பத்தேழு சதத் (ரூ.6,401,055.37) தொகை மீது பதினைந்து புள்ளி ஐந்து வீத (15.5%) வருடாந்த வட்டியுடன் சேர்த்து செலான் வங்கி பீ.எல்.சீ க்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகையாக நிற்பதன் காரணமாக மேற்படி தொகையான ஆறு மில்லியன் எழுநூற்று, நாற்பத்தெட்டாயிரத்து எண்ணூற்று நாற்பத்தொன்பது ரூபா எழுபத்தேழு சதத் (ரூ.6.748,849.77)தொகையை முற்றாக அறவிடும் வரை அத்தொகை மீது 2022 டிசம்பர் 20ஆம் திகதி தொடக்கம் முழுமையாக அறவிடும் காலப்பகுதி வரை மேல் குறிப்பிடப்பட்ட வட்டி வீதத்தில் வட்டித்தொகையையும், விளம்பர செலவுகளையும் மற்றும் மேற்படி சட்டத்தின் 13ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்படும் ஏனைய கட்டணங்களையும் சேர்த்து அறவிடுவதற்காகவும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் (எவையும்) பெறப்பட்டிருப்பின் அவற்றை கழித்து அறவிடுவதற்காக செலான் வங்கி பீ.எல்.சீ யிடம் மேற்படி 2123ஆம் இலக்க பிணை முறியின் கீழ் அடகு வைக்கப்பட்டதும் இதன் கீழ் அட்டவணையில் விவரிக்கப்பட்ட ஆதனம் மற்றும் அதன் வளாகங்கள் உத்தரவு பெற்ற ஏலதாரர் திரு.பீ.கே.ஈ. சேனாபதி என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி பீ.எல்.சீ இன் பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) கீழ் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானித்திருக்கின்றது.

**மேற்குறிப்பிடப்பட்ட ஆதன அட்டவணை:**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவு எல்லையில் ஹேவாகம் கோறளையின் பல்லே பத்துவில் ஹோமாகம பிரதேச சபை எல்லையின் இல. 481/ஏ-முல்லேகம தெற்கு கிராம சேவகர் பிரிவிற்குள், முல்லேகமவில் அமைந்துள்ள "கொஸ்கஹலந்தேவத்த மறுபெயர் தற்போது தஹம்பேதெச" என அழைக்கப்படும் காணியானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான பீ. ஜயகொடி என்பவரால் 1992.02.29ஆம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 3235ஆம் இலக்க நில வரைபடத்தின் லொட் F4 என பிரித்தொதுக்கப்பட்ட காணித் துண்டு மற்றும் அதிலுள்ள கட்டடங்கள், மரங்கள், பயிர்கள் உட்பட அதில் அமைந்துள்ள யாவும் ஆகும். அதன் எல்லைகளாவன: **வடக்கு:** லொட் F3 **கிழக்கு:** லொட் F13 **தெற்கு:** லொட் 5 **மேற்கு:** தலகலகே நோனாஹாமியின் கோன்கஹவத்த ஆகிய எல்லைகளைக் கொண்டகுறித்த 3235ஆம் இலக்க நிலவரைபடத்தின் லொட் F4 எனக் காட்டப்படும் காணியின் பரப்பளவானது பத்து புள்ளி மூன்று பேர்ச் (ஏ.0-றூ.0-பே.10.3) ஆகும்.

அத்தோடு கீழ் விபரிக்கப்பட்டுள்ள காணியின் ஊடாகவும் மேலாகவும் கீழாகவும் உள்ள வழியரித்துடன் சேர்த்து.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவு எல்லையில் ஹோமாகம பிரதேச சபை எல்லையின் இல. 481/9-முல்லேகம தெற்கு கிராம சேவகர் பிரிவிற்குள், முல்லேகமவில் அமைந்துள்ள "கொஸ்கஹலந்தேவத்த மறுபெயர் தற்போது தஹம்பேதெச" என அழைக்கப்படும் காணியானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான பீ. ஜயகொடி என்பவரால் 1992.02.29ஆம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 3235ஆம் இலக்க நில வரைபடத்தின் லொட் F13 (20 அடி அகலமான பாதைக்கான ஒதுக்கீடு) என பிரித்தொதுக்கப்பட்ட காணித் துண்டு ஆகும். அதன் எல்லைகளாவன:**வடக்கு:** 4037ஆம் இலக்க நிலவரைபடத்தின் லொட் E **கிழக்கு:** லொட் F17, F16, F13A, F12, F11, F10,F13B, F9 மற்றும் F8 **தெற்கு:** லொட் F13C, F1மற்றும் தலகலகே நோனாஹாமியின் கோன்கஹவத்த **மேற்கு:** லொட் F7, F6, F4, F3, F2, F1 ஆகிய எல்லைகளைக் கொண்ட குறித்த 3235ஆம் இலக்கநிலவரைபடத்தின் லொட் F13 எனக் காட்டப்படும் காணியின் பரப்பளவானது ஒரு றூட் மற்றும் இரண்டு பேர்ச் (ஏ.0-றூ.1-பே.2) ஆகும்.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**
**(திருமதி) வீ.ஏ. பரணகம**
**சட்டத்தரணி,**
**உதவிப் பொது முகாமையாளர் - சட்டம்**


# கலா பொல தேசிய கண்காட்சியில் திஹாரி அல்-அஸ்ஹர் மத்திய கல்லூரி
















வருடாந்தம் நடைபெறும் கலா பொல தேசிய கண்காட்சி அண்மையில் (19) கொழும்பில் நடைபெற்றது.

இதில் திஹாரி அல்-அஸ்ஹர் மத்திய கல்லூரி இரண்டாவது முறையாகவும் சுமார் 350 மாணவர்களின் படைப் பாக்கங்களோடு பங்குபற்றியது.

தேசிய ஓவியர்களும் பல்கலைக்கழக மாணவர்களும் பங்குகொள்ளும் இக்கண்காட்சியில் பாடசாலை ரீதியாக கலந்துகொள்ளும் வாய்ப்பு கடந்த தடவையும் இம்மாணவர்களுக்கு கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

இக்கண்காட்சியில் தரம் 8 முதல் 13 வரையிலான மாணவர்களின் ஓவியங்களும் புத்தாக்கப் படைப்புகளும் காட்சிப்படுத்தப்பட்டன.

ஓவியத்துறை வரையறையற்றதுடன், அவை நவீனப்படுத்தப்பட்டவை என்பதை இப்பாடசாலை மாணவர்களின் படைப்புகள் மூலம் அடையாளப்படுத்தப் பட்டது.

இம்மாணவர்களை பாடசாலையின் ஓவியத்துறை பொறுப்பாசிரியர்களான ஹிஸ்வானுஸ் ஸமான், திருமதி பாத்திமா பர்மிலா ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

30 வருடங்களாக நடைபெற்றுவரும் கலா பொல தேசிய கண்காட்சியில் பாடசாலைகள் என்ற ரீதியில் திஹாரி அல்-அஸ்ஹர் மத்திய கல்லூரி மாத்திரமே பங்குகொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023, பெப்ரவரி 24ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# ரணிலும் தேர்தலும்!

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைக்கும் உத்தரவை பிறப்பிக்குமாறு முன்னாள் இராணுவ கேர்ணல் ஒருவர் தாக்கல் செய்த ரிட் மனு மீதான விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த மனு விசாரணையை எதிர்வரும் மே மாதம் 11ஆம் திகதி வரை ஒத்திவைக்க உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படுவதை தடுக்கும் வகையிலான நீதிப்பேராணையை பிறப்பிக்குமாறு கோரி ஓய்வுபெற்ற இராணுவ கேர்ணல் டப்ளியூ.எம்.ஆர்.விஜேசுந்தர தாக்கல் செய்த மனுவே நேற்று உயர்நீதிமன்றில் மீண்டும் விசாரணைக்கு அழைக்கப்பட்டது.

இந்த மனு கடந்த 20ஆம் திகதி எஸ்.துரைராஜா மற்றும் ஷிரான் குணரத்ன உள்ளிட்ட உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் ஆராயப்பட்டது.

நேற்றைய தினத்திற்கு முன்னதாக அந்த மனுவை ஆராயுமாறு நகர்த்தல் பத்திரம் ஊடாக கோரப்பட்டது. எனினும்,நேற்றைய தினத்துக்கு முன்னதாக அதனை விசாரிப்பது அவசியமற்றதென மனுதாரர் தரப்பு சட்டத்தரணிகள் நீதிமன்றத்திற்கு அறியப்படுத்தினர்.

தற்போதைய சூழலில் தேர்தலை நடத்துவது சாத்தியமில்லை என அண்மையில் தேர்தல் ஆணைக்குழு உயர் நீதிமன்றுக்கு அறிவித்தது.

எனவே, மனுவை ஆராய்வதற்காக முன்னர் திகதி குறிப்பிட்டப்படி நேற்றைய தினமே அழைக்க உயர் நீதிமன்றம் தீர்மானித்தது.

நாட்டில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும், இந்த சந்தர்ப்பத்தில் உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடத்தப்படுவதால் மக்களுக்கு எந்தவித நன்மையும் ஏற்படப்போவதில்லை எனவும் சுட்டிக்காட்டும் மனுதாரர், தேர்தலை பிற்போடும் உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி குறித்த மனுவை தாக்கல் செய்திருந்தார்.

குறித்த மனுவின் பிரதிவாதிகளாக தேர்தல் ஆணைக்குழு மற்றும் அதன் அங்கத்தவர்கள் உள்ளிட்ட 9 பேர் பெயரிடப்பட்டிருந்தனர். நீதிமன்றத்தின் தீர்மானப்படி மே மாதம் வரை தேர்தல் நடக்கும் வாய்ப்பில்லை.

இதற்கிடையில், தேர்தல் ஆணைக்குழு தேர்தலை நடத்த உத்தியோகபூர்வமாக எவ்வித தீர்மானத்தையும் எடுக்கவில்லை என நேற்றைய சபை அமர்வில் பங்கேற்று உரையாற்றியபோது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

தேர்தலை நடத்துவதில், ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு இடையில் பரஸ்பர வேறுபாடுகள் காணப்பட்டதாக குறிப்பிட்ட ரணில், தற்போது தேர்தல் நடத்துவதற்கு நிதியும் இல்லை எனவும் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இறந்துவிட்டதாகவும், அதன் இறப்புச் சான்றிதழை எழுதுவதே இப்போது எஞ்சியிருப்பதாகவும் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ள கருத்து இன்றைய நாட்டின் நிலைமைக்கு மிகப் பொருத்தமானதாகவே இருக்கிறது.

தேர்தல் ஒத்திவைப்பு தொடர்பான மனுவை உயர்நீதிமன்றம் ஆராயவிருந்த சில மணிநேரங்களுக்கு முன்னர், தேர்தல் ஆணைக்குழுவையும் அதன் செயற்பாடுகளையும் பாராளுமன்றத்தில் கடுமையாக விமர்சித்தார் ரணில். நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி, பாராளுமன்றத்தில் தனியாளாக நின்று ஆற்றிய உரை ஆளுங்கட்சிக்கு வேண்டுமானால் உத்வேகம் தரும் ஒன்றாக இருக்கலாம். ஆனால், ஜனநாயக விரும்பிகளுக்கு ரணிலின் நேற்றைய உரை வெறும் காட்டுக்கூச்சல் போல் இருந்ததென்பதே உண்மை.

தேர்தல் ஆணைக்குழு சட்டபூர்வமாக தேர்தலுக்கு அழைப்பு விடுக்கவில்லை என பாராளுமன்றில் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இது மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவதான அறிவிப்பே. அப்படியானால் எதற்கு வேட்புமனு தாக்கல் செய்யும் வரை ஜனாதிபதியும் அரசாங்கமும் அமைதியாக இருக்க வேண்டும்? கட்டுப்பணத்தை ஏன் பெற்றுக்கொள்ள வேண்டும்? அரச அச்சகத்தில் கோடிக்கணக்கில் பெறுமதியான முதற்கட்ட வாக்குச்சீட்டுகளை ஏன் அச்சிட வேண்டும்? சட்டபூர்வ அறிவிப்பில்லை என்று தெரிந்திருந்தும், அவற்றை சுட்டிக்காட்டாத ரணிலுக்கு எதிராகவும் சட்டப்படி நடவடிக்கைளை எடுக்க வேண்டும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி என்பதால், தன்மீது சட்டம் பாயாது என்பதால் தவறுக்கு துணை போய் இப்போது அந்தத் தவறுகளை சுட்டிக்காட்டுகிறார் ரணில்.

பாராளுமன்றில் ரணில் கூறிய வியாக்கியானங்கள் ஆளுங்கட்சிக்கு வேண்டுமானால் நல்லதாக இருக்கலாம். ஆனால், இந்த தர்க்கம் தார்மீக சமுதாயம் ஒன்றினால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய ஒன்றல்ல. ‘வேண்டாத பெண்டாட்டி கை பட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம்’ என்பதுபோல் தேர்தல் ஆணைக்குழு என்ன செய்தாலும் தவறு என்று அர்த்தப்படுத்துகிறார் ரணில். தேர்தல் நடத்துவது தொடர்பில் ரணில் கூறும் வியாக்கியானங்கள் சரி என்றால் இனி தேர்தல் ஒன்று நாட்டில் நடக்குமா என்பதே தெரியவில்லை. தேர்தலை ஒத்திவைக்க ரணில் அரசு செய்யும் முயற்சிகளுக்குப் பதிலாக தேர்தலை நடத்தியிருக்கலாம். ஆனால், தோல்வி பயம் காரணமாக எல்லா உருட்டுகளையும் உருட்டுகிறார் ரணில். தேர்தலொன்றே தனது கட்சியை சின்னாபின்னமாக்கியது என்று ரணில் தேர்தலுக்கு அஞ்சுகிறார் போலும். அதனால்தான் தேர்தல் அலர்ஜி அவருக்கு.

## இன்றைய நாளில்...

- ✱ 1809 – லண்டன் ரோயல் நாடக அரங்கு தீக்கிரையானது.
- ✱ 1863 – ஐக்கிய அமெரிக்காவின் பிராந்தியமாக அரிசோனா அமைக்கப்பட்டது.
- ✱ 1945 – எகிப்தியப் பிரதமர் அகமது மாகிர் பாசா பாராளுமன்றத்தில் வைத்துக் கொல்லப்பட்டார்.
- ✱ 1969 – மரைனர்-6 விண்கலம் செவ்வாய்க் கிரகத்துக்கு ஏவப்பட்டது.
- ✱ 2008 – 32 ஆண்டுகளாக கியூபாவின் அரசுத்தலைவராக இருந்த பிடல் காஸ்ட்ரோ அப்பதவியிலிருந்து இளைப்பாறினார். இவர் கூபாவின் பொதுவுடைமைக் கட்சியின் தலைவராக அடுத்த மூன்று ஆண்டுகளுக்குப் பதவியிலிருந்தார்.
- ✱ 2009 – வாட்ஸ் அப் கலிபோர்னியாவில் தொடங்கப்பட்டது.



# புறாக்களை வேட்டையாடும் புதிய ரஷ்யா!

தி.இராசகோபாலன்

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து ஓராண்டு நிறைவடையவுள்ள நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் எவ்வித முன்னறிவிப்புமின்றி உக்ரைனுக்குத் திடீர் பயணம் மேற்கொண்டமை உலக நாடுகளை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

அது மட்டுமல்ல, உக்ரைனில் செய்தியாளர்களிடம் பேசிய பைடன், “உக்ரைனை எளிதில் வீழ்த்திவிடலாம் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புட்டின் தவறாக கணக்குப் போட்டுவிட்டார். அவரது திட்டம் படுதோல்வியடைந்து கொண்டிருக்கிறது. உக்ரைன் தளராமல் மன உறுதியுடன் நிற்கிறது. உக்ரைனுடன் சேர்ந்து ஜனநாயகமும் தலைநிமிர்ந்து நிற்கிறது'' என்றும் கூறியுள்ளார்.

அவர் கூறியது சரிதான். நேட்டோ அமைப்பில் இணைவதற்கு விளாடிமிர் செலென்ஸ்கி தலைமையிலான தற்போதைய உக்ரைன் அரசு கடந்த ஆண்டு விருப்பம் தெரிவித்தது. தங்களுக்கு எதிராக உருவாக்கப்பட்ட நேட்டோ அமைப்பில் தங்களின் நெருங்கிய அண்டை நாடான உக்ரைன் இணைவது தங்களின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று ரஷ்யா கருதியது. அதனால் கடந்த ஆண்டு பெப்ரவரி 24 அன்று உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்தது. தனது அண்டை நாடு என்றாலும் உக்ரைன் தனது அடிமை நாடு அல்ல என்பதை ரஷ்யா எண்ணிப் பார்க்கவில்லை.

ஒக்டோபர் புரட்சி முடிந்து, 1917இல் புதிய ரஷ்யா உருவானபோது, உலகின் அடிமைப்பட்ட நாடுகள், அனைத்தும் எல்லையற்ற மகிழ்ச்சி அடைந்தன. சோவியத் நாட்டிற்கு வந்த சுதந்திரம், அடிமைப்பட்ட நாடுகளுக்கு எல்லாம் புது நம்பிக்கையை ஏற்படுத்தியது.

அடிமைத்தனம் எங்கிருந்தாலும் அதன் சிறகொடிக்க விரும்பிய பாரதி,

“ஆகாவென்று எழுந்தது பார் யுகப்புரட்சி'' என அதனை வாழ்த்தி, முதல் அங்கீகாரத்தைத் தந்தான். குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு மேன்மையுறக் குடிமை நீதி கடியொன்றில் எழுந்தது பார் குடியரசென்று உலகறியக் கூறிவிட்டார்.

''அடிமைக்குத் தளையில்லை. யாருமிப்போது அடிமையில்லை அறிக'' என்று அடிமைப்பட்ட மக்களின் மனத்தில் நம்பிக்கை நட்சத்திரத்தை மிளிரச் செய்தார் அந்த மகாகவி!

***சோவியத் கவிஞனான மாயாகோவ்ஸ்கி,***
***இன்றெனது தாய்நாடு***
***என்பதனைப் பாடுகின்றேன்***
***என்றாலும், இதைத் தொடர்ந்து***
***இனிவருமோர் புதுயுகத்துப்***
***பொன்னாட்டை முக்காலும்***
***போற்றி செய்து பாடுகின்றேன்***

என பாரதியின் பல்லவிக்கு, அனுபல்லவியாகப் பாடினான்.

அடிமைப்பட்ட நாடுகளின் சுதந்திரத்திற்கும் பாடுபடுவேன் என்பது மாயாகோவ்ஸ்கியின் பாடலின் பொருளாகும்.

கியூபாவிற்கு விடுதலையைப் போராடி கொடுத்த பின்பு, உடனே அம்மண்ணை விட்டுப் புறப்பட்டார் சேகுவரா. “எங்கே புறப்படுகிறீர்கள்?'' எனக் கேட்டார் காஸ்ட்ரோ. அதற்குச் சேகுவரா “அடிமைப்பட்ட நாடுதான் என் தாய்நாடு. அந்த நாட்டிற்கு விடுதலையைப் பெற்றுத் தருவதுதான் என் பிறப்புரிமை'' எனச் சொல்லி, பொலிவியாவை நோக்கிப் புறப்பட்டார். சேகுவராவைப் போன்ற சோஷலிஸ்ட்டாக இன்றைய ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினும் இருப்பார் என எதிர்பார்க்க முடியுமா?

சோவியத் நாட்டிற்கு சுதந்திரம் வந்தவுடன் மகாகவி பாரதி, ‘வரப்போகும் யுகம்’ என ஆங்கிலத்தில் ஒரு கட்டுரை வரைந்தார். “சோஷலிசம் என்று மேலை நாட்டினர் குறிப்பிடுவது என்னவென்று, இங்குத் தெளிவாகப் புரிந்து கொள்ளப்படவில்லை. என்றாலும் மேலை நாட்டுக்கும் சரி, கீழை நாட்டுக்கும் சரி, கௌரவமான வாழ்க்கை நடத்துவதற்கு ஒரே ஒரு மார்க்கம்தான் உள்ளது. உலகைப் பொதுவுடமையாக்கி, அதில் தொழிலாளிகளாகவும், கூட்டுப் பங்காளிகளாகவும் வாழ்வதே அந்த மார்க்கம் ஆகும்'' என வரைந்த அரசியல் சாஸ்திரத்தைப் புட்டினால் புரிந்து கொள்ள முடியவில்லை.

அதனால் உக்ரைன் உருக்குலைந்து போயிற்று. அடிமைப்பட்ட மக்களை வால்கா நதியாக வாழ வைக்கும் என எதிர்பார்த்த மக்களுக்கு நெருப்பாறாக வந்து, சுடுகின்றனர் நவீன சோஷலிஸ்டுகள். ரஷ்யா, உக்ரைனிலிருந்த பாடசாலைகள், மசூதிகள், அருங்காட்சியகங்கள் அனைத்தையும் அழித்து, நாட்டையே சுடுகாடு ஆக்கிவிட்டது.

கவிஞர்களை தீர்க்கதரிசிகள் எனச் சொல்லுவார்கள். பிரெஞ்சு நாட்டுக்கு விடுதலை வரப்போவதை, முன்கூட்டியே சொன்னவர் கவிஞர் வேட்ஸ்வொர்த். ஆனால், வந்த சுதந்திரம் பயனில்லாது போனதைப் பார்த்துக் கண்ணீர் விட்டவரும் அவரேதான்!

ஒன்றுபட்ட சோவியத் - சோஷலிஸ்ட் குடியரசு உருவானபோது, 16 குறுநாடுகள் சேர்ந்து உருவாயிற்று. ஒன்றியத்திலிருக்கும் குறுநாடுகள், விரும்பினால் பிரிந்து போவதற்குரிய அனுமதியையும் தந்தது ஒன்றியம். ஆனால், இன்றைய புட்டினுக்கு அது வரமாக இல்லாமல், சாபமாகத் தெரிகிறது.

அமெரிக்கா தனது பலத்தைக் கொண்டு கியூபாவை அடிமைப்படுத்த முயன்ற நேரத்தில், குருசேவ் அனைத்து உதவிகளையும் கியூபாவிற்கு தந்து அந்நாடு விடுதலை பெற உதவினார்.

அமெரிக்கா வியட்நாமை தனது சகல அஸ்திரங்களையும் பயன்படுத்தி அபகரிக்க நினைத்த நேரத்தில், ரஷ்யா சர்வதேச நல்லெண்ணங்களை வியட்நாம் பக்கம் உருவாக்கி அந்நாடு ஆக்கிரமிப்பில் இருந்து தப்பிக்க உதவியது.

இவ்வாறெல்லாம் உலக சமாதானத்திற்கும் சமத்துவத்திற்கும் உதவிய சோவியத் நாடு, குருசேவிற்குப் பிறகு வந்த தலைவர்களால் கொண்ட கொள்கைகளை மறந்துவிட்டது. அதற்குக் கீழிருந்த நாடுகள் ஒவ்வொன்றாக பிய்த்துக் கொண்டு போகத் தொடங்கின.

சோவியத் ஒன்றியம், தம்மிடமிருந்த 15 நாடுகளில் போலந்து, வடகொரியா, ஹங்கேரி உட்பட பத்து நாடுகளை இழந்தது.

சோவியத் ஒன்றியத்தால் சுயாட்சி பெற்ற நாடு, கியூபா. அந்நாட்டின் தலைவராக இருந்த பிடல் காஸ்ட்ரோ, ஒன்றியத்திலிருந்த நாடுகள் ஆதிக்க அதிகாரத்தால் அச்சுறுத்தப்பட்டபோது தலைமைப் பீடத்தை எச்சரித்தார்.

சோமாலியா, சராயிவோ, செர்பியா, ஹெர்ஜிஹோவா போன்ற நாடுகளில் மனித உரிமைகள் மீறப்பட்டபோது உள்நாட்டுச் சிக்கல்கள் ஏற்பட்டன. அப்பொழுதும் பிடல் காஸ்ட்ரோ அதிகார பீடங்களைக் கடுமையாக எச்சரித்தார். மேலும், தான் எப்படி ஆட்சி செய்கிறேன் என்பதையும் எடுத்துரைத்தார்.

“கடந்த 40 ஆண்டுகளாக எங்கள் நாட்டின் மக்கள் மீது எந்தவிதமான அடக்குமுறையும் பயன்படுத்தப்படவில்லை. தொழிலாளர்கள், மாணவர்கள், விவசாயிகள் யாரும் அடக்குமுறைக்கு உள்ளானதில்லை. கடந்த நாற்பதாண்டுகளாகக் காவலர்களோ, இராணுவத்தினரோ மக்களை அடித்துத் துன்புறுத்தியதில்லை. மூன்றாம் உலக நாடுகளில் நடப்பதுபோல், புகைக்குண்டோ, இறப்பர் குண்டோ வீசப்பட்டதில்லை. இந்த அடிப்படையில்தான் கேட்கிறேன், கியூபாவை விட மனித உரிமைகள் சிறப்பாக வேறு எந்த நாட்டில் பாதுகாக்கப்படுகின்றன?'' என்றார் அவர்.

பிடல் காஸ்ட்ரோ சொன்ன அறிவுரை, வல்லரசுகள் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டியவை. உக்ரைன் அதிபர் செலென்ஸ்கி செய்த ஒரே செயல் நேட்டோவுடன் தன்னை இணைத்துக் கொள்ள முயன்றதுதான். அந்த ஒன்றிற்காக ரஷ்யா, இன்றைக்கு ஜார் மன்னன் எந்தெந்த கொடுமைகளைச் செய்தானோ, அவற்றைவிடக் கேவலமான செயல்களைச் செய்யத் தொடங்கிவிட்டது. “செம்மையெலாம் பாழாகிக் கொடுமையே அறமாகித் தீர்ந்த போதில் என பாரதி ஜார் மன்னன் ஆட்சியைப் பாடியதை, அப்படியே புட்டின் உக்ரைனில் நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்.

உக்ரைனில் வடபகுதியில் இருந்த “கிவ் நகரில் “புட்சா என்ற ஊரில் ரஷ்ய இராணுவத்தினர் அணுசக்தி ஆயுதங்களை எல்லாம் பயன்படுத்தி வரலாற்றுச் சிறப்பு மிக்க கட்டடங்கள், தேவாலயங்கள், மருத்துவமனைகள், பள்ளிக்கூடங்கள் ஆகிய அனைத்தையும் தகர்த்தெறிந்தனர்.

அப்போர் நடவடிக்கையில் 10,000 மனிதர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். 430 மழலையர், பாடசாலை மாணவ, மாணவியரும் குண்டு வீச்சில் மாண்டு போயினர். வீட்டுக்குள் முடங்கிக் கிடந்தவர்களைக் கண்டுபிடித்து அவர்களைச் சுட்டுக் கொன்றிருக்கின்றனர். அக்கொடுமை நிகழ்ந்த ஏப்ரல் 3ஆம் நாளை (2022) புட்சா மக்கள் ‘இரத்த நாளாக’ எழுதி வைத்துள்ளனர்.

ஐ.நா.வின் எச்சரிக்கைகளை எல்லாம் தூக்கி எறிந்துவிட்டு, இராணுவம் நடத்திய நிகழ்ச்சி நெருப்பாறாக நெஞ்சைச் சுடுகிறது.

கொடுமையிலும் கொடுமை, உக்ரைனில் பாடம் நடத்திக் கொண்டிருந்த ஆசிரியர்களைப் பயமுறுத்தி, “இனிமேல் உக்ரைன் மொழி கற்பிக்கக்கூடாது. ரஷ்ய மொழிதான் கற்பிக்க வேண்டும்'' என எச்சரித்ததுதான்.

அத்துடன் பத்திரிகையாசிரியர்களை அழைத்து, இனிமேல் அங்கு நடக்கின்ற எதனையும் எழுதக்கூடாது என்று கடுமையாக எச்சரித்துச் சென்றது ரஷ்ய இராணுவம்.

பாவேந்தர் பாரதிதாசன் ரஷ்யாவின் நடப்பை முன்கூட்டியே உணர்ந்து ‘வரிசை கெட்ட உருசிய நாடு’ எனும் தலைப்பில் ஒரு கவிதை எழுதியுள்ளார். சோவியத் தொழிலாளி ஒருவர் எழுதியதை அடிப்படையாகக் கொண்டு பாவேந்தர் எழுதுகிறார்.

உருசிய நாட்டில் ஒரு தொழிலாளி பொதுவுடமைத்தாள் ஒன்றில் புகழுகின்றான்.

***எழில் நிலவு நோக்கி ஏவுகணைகள்***
***ஏவுகின்றதால் என்னைப் போன்ற***
***ஏழைகளுக்கு என்ன கிடைக்கக் கூடும்***
***என்றான் - உருசியாவில் ஏழைகள் இல்லை.***
***என்று கூறும் இழிந்த அறிவினர்***
***இதனை எண்ணி அடங்க வேண்டும்,***

எனப் பாவேந்தர் பாடியிருப்பது, ரஷ்யாவின் ஒரு போக்கைப் பற்றித்தான். புட்டின் இனி புலிகளை வேட்டையாடட்டும். புறாக்களை வேண்டாம்.

***(நன்றி: தினமணி)***




## தவக்கால சிந்தனை

### உறவின் காலம்



தனி மரம் தோப்பாக முடியாது. மனிதன் ஒரு சமூகப் பிராணி. உறவு அவனுக்கு மிக அவசியம். உறவின்றி வாழ்வில்லை. உறவும் உண்மையாக இருக்கும்போதே மனிதன் வாழ்வு நலம் பெறுகின்றது. உறவு கொள்ளவே, உறவைத் தேடியே இறைமகன் மனிதரானார். அவருக்கு உறவு மிக அவசியமானது. தந்தையோடும், தூய ஆவியோடும் அவர் உறவு கொண்டார். திரித்துவத்தின் உறவு படைத்தல், காத்தல், பராமரித்தல் என்பதில் வெளிப்படையாகத் தெரிகின்றது.

இன்று மனிதர்கள் தங்களுக்கு சுற்றுச்சுவர் எழுப்பிக் கொண்டு தனித்தனித் தீவாக வாழ்ந்து வருவதாலேயே பல விதத்தில் அச்சம் அதிகரிக்கிறது. மனபாரம் வேலைப் பளுவால் அதிகரிக்கிறது. உதவிட யாரும் இல்லை. இவனும் யாருக்கும் உதவி செய்ய முன்வருவதில்லை. தனிமை இவனை விரட்ட இவன் தடுமாறுகின்றான். நோயாளியாக இவன் வாழ்வு பரிதாபத்திற்குரியதாக மாறுகின்றது.

ஊதாரி மைந்தன் உவமை – சுமுகமான முடிவு – எல்லோரும் ஒன்றாக இருப்பார்களாக.

உறவை விரும்பும் தகப்பனார் ஒன்றிணைக்கின்றார். மகன்களும் பிரிந்தாலும் உணர்ந்து ஒன்று சேர்கின்றார்கள். மகன் இளையவன் பிரிந்து செல்ல முற்படும் போதும், மூத்தவன் கோபப்படும் போதும் தகப்பனார் அனுமதிக்கின்றார். சில நேரங்களில் தனித்திருக்கும்போது புரிதல் நன்கு ஏற்படும். ஆனால், புரிந்து வரும்போது மூவரும் ஒருவரையொருவர் ஏற்று உறவுக்கு முற்படுகின்றார்கள்.

தவக்காலம் நமக்கு தரப்படும் உறவின் அற்புதமான காலம். ஒப்புரவாவது மிக அவசியமானதும் கூட.. படைத்தவரோடு மட்டுமல்ல, நம்மோடு வாழ்வோரோடும் நாம் ஒப்புரவாவது காலத்தின் கட்டாயம். நல்ல ஆரோக்கியமுள்ள சமூகத்தைக் கட்டியெழுப்புவதில் அக்கறை கொள்வோம். ஒரு புதிய சமூகத்தைக் கட்டியெழுப்பி உறவில் இறைவனை உயிர்ப்பிக்கச் செய்வோம்.

# குடா ஓயா நீர்த்தேக்கத்தின் நிர்மாணப் பணிகள் மீள ஆரம்பம்







கொரோனா தொற்று மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுவரும் குடா ஓயா நீர்த்தேக்கத்தின் நிர்மாணப் பணிகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மொனராகலை மற்றும் பதுளை மாவட்டங்களின் எல்லையில் அமைந்துள்ள குடா ஓயா நீர்த்தேக்கத்திற்கு தியபெத்ம ஓயா மற்றும் வண்டிகும்புர ஆற்றிலிருந்து நீர் கிடைக்கிறது.

இதுவரை பெரும்போகத்தில் மாத்திரம் விவசாயம் செய்து வந்த விவசாயிகள் தற்போது சிறுபோகத்திலும் விவசாயத்தை மேற்கொள்ள முடியும்.

இந்த திட்டத்திற்காக 17 ஆயிரம் மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினூடாக 17ஆயிரம் ஏக்கர் விவசாய நிலப்பரப்புக்கு தண்ணீர் வழங்கப்படுகிறது.

இத்திட்டம் தொடர்பில் பிரதி திட்டப்பணிப்பாளர் எச்.எம்.பி.எஸ்.டி.ஹேரத் கருத்து தெரிவிக்கையில்,

உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டத்தின் ஆரம்பப் பணிகள் 01/08/2016 அன்று ஆரம்பிக்கப்பட்டது. இதில், அலிகொட்டார நீர்த்தேக்கத்தின் நிர்மாணப் பணிகள் மற்றும் ஹந்தபனகல குளத்தின் விரிவாக்கப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

உமா ஓயாவிலிருந்து அலிகொட்டார ஏரிக்கு பாயும் நீர், குடா ஓயா நீர்த்தேக்கத்திற்கு அருகில் கட்டப்பட்டுள்ள மற்றுமொரு கால்வாய் மூலம் தாழ்வான பகுதிகளில் அமைந்துள்ள 59 சிறிய குளங்களுக்கு திறந்து விடப்படுகிறது.

கால்வாய் மூலமாக வருகின்ற நீர் இரண்டு சுரங்கங்கள் வழியாக செல்கிறது. ஒரு சுரங்கப்பாதை 360 மீற்றர் நீளமும், மற்றைய சுரங்கப்பாதை 412 மீற்றர் நீளமும் கொண்டது. மேலும், 420 மீற்றர் நீளமுள்ள நிலக்கீழ் நீரூற்றும் அமைக்கப்பட்டுள்ளது.

சுரங்கப்பாதை ஊடாக பாயும் குடா ஓயா பகுதிக்கு பாய்கிறது. 2024ஆம் ஆண்டின் இறுதியில், இத்திட்டத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது – என்றார்.

குடா ஓயா நீர்த்தேக்கத் திட்டத்தின் வதிவிடப் பொறியியலாளர் டபிள்யூ.எம்.கே.டி.விஜேரத்ன கருத்துத் தெரிவிக்கையில்,

பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களின் எல்லையில் அமைந்துள்ள குடாஓயா நீர்த்தேக்கம் ஹல்துமுல்ல, வெல்லவாய, தனமல்வில பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களுக்கு பயனளிக்கிறது.

ஏரியின் தடுப்பணை, மதகு அமைக்கும் பணிகள் நிறைவடைந்து வருகின்றன. ஏரியில் தண்ணீர் நிரம்பியுள்ளது. தேவை ஏற்பட்டால் மாத்திரம் குடா ஓயா நீர்த்தேக்கத்தில் இருந்து குளங்களுக்கு நீர் திறந்து விடப்படும் – என்றார்.

குடாஓயா சிங்களயகம வதிவிட பொறியியலாளர் சதுரங்க கருத்து தெரிவிக்கையில்,

சமீபத்திய கொரோனா தொற்று மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு கட்டுமானப் பணிகளுக்கு இடையூறாக இருந்தது. அதனால் கட்டுமானப் பணிகள் மிகவும் மெதுவாக நடந்தது என்றார்.

மொனராகலை நீர்ப்பாசனப் பணிப்பாளர் எஸ்.பி.பி.பண்டார கருத்து தெரிவிக்கையில்,

தற்போது, மொனராகலை மாவட்டத்தில் பிரதான நீர்ப்பாசன முறைக்கு சொந்தமான சுமார் 35 குளங்கள் உள்ளன. இதில் சுமார் இருபதாயிரம் ஏக்கர் விவசாயம் செய்யப்படுகிறது.

குடா ஓயா நீர்த்தேக்கம் மொனராகலை மாவட்டத்தின் மிகப்பெரிய நீர்த்தேக்கமாகும். பெரும்போகம் மற்றும் சிறுபோகங்களில் விவசாயத்தை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கிறது – என்றார்.

## பொலிஸ் காவலில் இருந்த நபர் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழப்பு

30 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் பொலிஸ் காவலில் இருந்தபோது சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்படி, நேற்று (23) காலை 06.00 மணியளவில் கட்டுநாயக்க, மடவளை பிரதேசத்திலுள்ள சதுப்பு நிலத்திற்கு, சந்தேகநபரால் மறைத்து வைத்திருந்ததாக சொல்லப்பட்ட ஆயுதங்களை மீட்பதற்காக பொலிஸாரால் அழைத்து வரப்பட்டபோதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த இடத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த கைக்குண்டு ஒன்றை பொலிஸ் அதிகாரிகள் மீது வீச முற்பட்டபோது, சந்தேகநபர் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான சந்தேக நபர் கொலைகள் உட்பட பல குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர் என நேற்று முன்தினம் (22) மாத்தறையில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்கள் நேற்று போராட்டம்




சுகாதார சேவைகள் தொழிற்சங்க கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நாடு முழுவதும் உள்ள சகல அரச மருத்துவமனைகளிலும் நேற்று (23) காலை 7 மணி முதல் மதியம் 12 மணி வரை பணிப் பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டது.

அதற்கு ஆதரவு வழங்கும் வகையில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலும் பணிப் பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்பட்டது.

மேலதிக நேரக் கொடுப்பனவை வரையறுத்தல் தொடர்பான சுற்றறிக்கையை நீக்குதல், மின் கட்டணத்தை குறைத்தல் உட்பட தாம் முன்வைத்த 8 கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்தப் புறக்கணிப்பு போராட்டம் மேற்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

## சோளத்துக்கான நிர்ணய விலைக்கு கால்நடை பண்ணையாளர்கள் இணக்கம்

விவசாயிகள் இந்த பருவத்தில் பயிரிடும் சோளம் ஒரு கிலோ 160 ரூபாவுக்கு கொள்வனவு செய்ய கால்நடை பண்ணையாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இப்பருவத்தில், 65 ஆயிரம் ஹெக்டேயர் மக்காச் சோளம் பயிரிடப்பட்டு, ஒரு இலட்சத்து 35 ஆயிரம் மெட்ரிக் தொன் விளைச்சல் எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், 2023ஆம் ஆண்டு வசந்த மற்றும் கோடைக் காலங்களில் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் ஹெக்டேயர்களில் பயிரிட திட்டமிடப்பட்டுள்ளதுடன், 3 இலட்சம் மெற்றிக் தொன் விளைச்சல் எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டில் வருடாந்தம் 05 இலட்சம் மெற்றிக் தொன் சோளம் தேவைப்படுகிறது.

## பாணந்துறை – தொடங்கொட பகுதிகளில் இனந்தெரியாத இருவரின் சடலங்கள் மீட்பு

தொடங்கொட மற்றும் பாணந்துறையில் இனந்தெரியாத இருவரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடங்கொட யதோல பயாகல வீதியில் சடலமாக கண்டெடுக்கப்பட்டவர் 55 வயதுடையவர் எனவும் சடலம் நிர்வாணமாக காணப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, பாணந்துறை, பொல்கொட ஆற்றில் மிதந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டவர் 40 வயதுடையவர் எனவும், வெள்ளை நிற டீசர்ட் மற்றும் கால்சட்டை அணிந்திருந்ததாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்தவர்களின் இரு சடலங்களும் பாணந்துறை ஆதார வைத்தியசாலை மற்றும் நாகொட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், உறவினர்களால் அடையாளம் காணப்பட்டதன் பின்னர் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.




**பிறந்திருக்கும் வியாழன் மாற்றத்திற்காக உற்சவகிரியைகள் நேற்று வரலாற்று சிறப்புமிக்க வண்ணயம்பதி ஸ்ரீவேங்கடவரதராஜப்பெருமாள் தேவஸ்தானத்தில் நடைபெற்றது. இதன்போது நவக்கிரக சாந்தியத்தில் அபிஷேக, ஆராதனைகள் மிக சிறப்பாக இடம்பெற்றன.**





***சீனன்கோட்டை குர்ஆன் மதாரிஸின் கீழ் உள்ள தர்கா வீதி ஜெலாலிய்யா குர்ஆன் மத்ரஸாவின் ஏற்பாட்டிலான மீலாத் பரிசளிப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. அதிபர் எம்.இக்ராம்(நூலாரி) தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறார்களின் சன்மார்க்க போட்டி நிகழ்ச்சிகளும் இடம்பெற்றதோடு பரிசில்களும் வழங்கப்பட்டன.***

***(படங்கள்:- பேருவளை பீ.எம்.முக்தார்)***


ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

### 23.02.2023 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 132 233 | 143 322 |
| கனேடியன் டொலர் | 152 5603 | 163 388 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 40 03 3 | 43 0773 |
| யூரோ | 267 6 05 | 282 4655 |
| ஜப்பான் யென் | 1 5338 | 1 638 |
| சிங்கப்பூர் டொலர் | 155 2384 | 165 7485 |
| ஸ்ரேலிங் பவுன் | 320 0588 | 335 3042 |
| சுவிஸ் பிரான்ங் | 271 6751 | 288 8401 |
| ஐ.அ.டொலர் | 248 51 | 257 4181 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 848 1356 |
| குவைட் | குவைட் தினார் | 0,068 2022 |
| ஓமான் | ஓமான் றியால் | 828 2167 |
| கட்டார் | கட்டார் றியால் | 88 684 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 3 7 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 3507 |

## தேசிய லொத்தர் சபை தலைவராக சமீர யாப்பா அபேவர்தன நியமனம்



ஆறு தசாப்த காலத்துக்கு அண்ணளவாக நாட்டின் பொருளாதாரத்துக்கு சக்தியாக விளங்கும் முன்னணி அரச நிறுவனமான தேசிய லொத்தர் சபையின் 26ஆவது தலைவராக வைத்தியர் சமீர யாப்பா அபேவர்தன நேற்று முன்தினம் (22) சர்வமதத் தலைவர்களின் ஆசீர்வாதத்துடன் கடமைகளை ஆரம்பித்தார்.

இச்சந்தர்ப்பத்தில் தேசிய லொத்தர் சபையின் முன்னாள் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி ரொனல்ட் சீ.பெரேராவுடன் ஜப்பான் தூதரக துணைத் தலைவர் கட்சுகி கொட்டாரோ, தேசிய லொத்தர் சபையின் பணிப்பாளர் சபை மற்றும் உயர் முகாமைத்துவ அதிகாரிகள் மற்றும் அனைத்து ஊழியர்கள், அபேவர்தனவின் உறவினர்களும் பங்குபற்றி இருந்தனர்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

புதன்கிழமை 2023.02.22

உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5039 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 37,211,907.00
ஆங்கில எழுத்து Y — வெற்றி இலக்கங்கள் 7 0 9 8 1 0

**கொவிசெத** — சீட்டிழுப்பு இலக்கம் 3281 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 80,993,315.20
ஆங்கில எழுத்து H — வெற்றி இலக்கங்கள் 06 07 41 58

**ஜாதிக சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 1494 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,169,685.60
வெற்றி இலக்கினம் — வெற்றி இலக்கங்கள் 9 4 9 5 3 9

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் 1069 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 84,802,952.40
ஆங்கில எழுத்து J — வெற்றி இலக்கங்கள் 37 54 58 64

**ராசி சுப பலன்** Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 348 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,500,000.00
வெற்றி இலக்கினம் மிதுனம் — வெற்றி இலக்கங்கள் 22 24 25 47 — விசேட இலக்கினம் மிதுனம்

**மெகா பவர்** — சீட்டிழுப்பு இலக்கம் 1387 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 302,519,502.00
ஆங்கில எழுத்து O — சுப்பர் இலக்கம் 07 — வெற்றி இலக்கங்கள் 02 39 41 74
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# அரசாங்க ஊழியர்கள் தமது உத்தியோகபூர்வ வெளிநாட்டு பயணங்களை சாதாரண வகுப்பில் மட்டுமே பயணிக்கலாம்

## மார்ச் 01 முதல் நடைமுறைக்கு வருவதாக ஜனாதிபதி அறிவுறுத்தல்

வெளிநாட்டுப் பயணங்களுக்கான விமான ரிக்கெட்டுகளை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கத்தின் நிதியைப் பயன்படுத்தும்போது, பிரதம நீதியரசர், உச்ச நீதிமன்ற நீதியரசர்கள், மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் தவிர்ந்த ஏனைய அதிகாரிகள் சாதாரண (Economy Class) வகுப்பு விமான ரிக்கெட்டுகளை மாத்திரமே கொள்வனவு செய்யவேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால் கையொப்பமிடப்பட்ட 2023 பெப்ரவரி 22ஆம் திகதி சுற்றறிக்கை பிரதமரின் செயலாளர், அமைச்சரவை செயலாளர் மற்றும் அனைத்து அமைச்சுகளின் செயலாளர்கள், அனைத்து மாகாண பிரதம செயலாளர்கள் மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அதிகாரி ஒருவர் வணிக வகுப்பில் (Business Class) பயணம் செய்ய விரும்பினால், சாதாரண வகுப்பு விமான ரிக்கெட்டின் விலைக்கும் வணிக வகுப்பு விமான டிக்கெட்டின் விலைக்கும் உள்ள வித்தியாசத்தை தனது தனிப்பட்ட பணத்திலிருந்து செலவழித்து வணிக வகுப்பில் பயணம் செய்யலாம்.

இந்தச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, மேற்கூறிய விதிகளுக்குப் புறம்பாக ஒரு விசேட காரணத்திற்காக அரசாங்க நிதியைப் பயன்படுத்தி அதிகாரி ஒருவர் வணிக வகுப்பில் பயணிக்க விரும்பினால், அவர் தேவையான தகவல்களை சமர்ப்பித்து ஜனாதிபதியின் செயலாளரின் முன்அனுமதியைப் பெறவேண்டும்.



குறித்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் 2023 மார்ச் 01முதல் நடைமுறைக்கு வருகிறது. அதன்படி இந்த விடயம் தொடர்பில் முன்னர் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் அல்லது அறிவுறுத்தல் கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள், குறித்த திகதிமுதல் செல்லுபடியாகாது.

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார மற்றும் நிதி நெருக்கடிகள் காரணமாக அரசாங்கத்தின் நிதியை அத்தியாவசிய பணிகளுக்கு மாத்திரம் மிகவும் சிக்கனமான முறையில் செலவிடுவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கு இணங்க ஜனாதிபதி இந்தப் பணிப்புரையை வழங்கியுள்ளார்.




### Purchasing Executive

**Company: GPV Lanka PVT Ltd**
***Email: hr.lk@gpvgroup.com***

### Accountant

**Company: Trident**
***Email: careers@trident.lk***

### Junior Executives

**Company: Janashakthi Insurance PLC**
***Email: careers@jxg.com***

### Video Editor

**Company: Abigail House**
**Location: Battaramulla**
***Email: hr@abigailhouse.lk***

### HR Intern/HR Executive/ HR Consultant

**Company: Capsicumlabs**
***Apply: www.capsicumlabs.com/hrspecialist***

### Librarian

**Institution: The Bandaranayaike Centre for International Studies**
***Email: careers@bmich.com***

### Customs Data Entry Operator/ Sales Executive/ Wharf Executive

**Company: Skyline Logistics PVT Ltd**
***Email: skylinelogisticscolombo@hotmail.com***

### Graphic Designer

**Institution: British Way English Academy**
**Location: Nittambuwa**
***Email: vacancy.britishway@gmail.com***

### Intern – Human Resources

**Company: V S Information System PVT Ltd**
**Address: Head of Human Resources, V S Information System PVT Ltd, 07, Suleiman Terrace, Colombo 05.**

### Digital Marketing Executive

**Company: eBeyonds**
***Email: jobs@ebeyonds.com***

### Data Entry Operators

**Company: TR Associates**
***Email: mkncorporates@gmail.com***

### Sales Executives

**Company: Eureka Australian Migration Experts**
***Email: careers.eureka@gmail.com***

# பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் பாதுகாப்பானதா? ஒரு வாரத்துக்குள் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்

## அதிகாரிகளுக்கு வட மாகாண ஆளுநர் அதிரடி உத்தரவு



வட மாகாணத்தில் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும் குடிநீர் பாதுகாப்பானதா என உறுதிப்படுத்துமாறு வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண மக்கள் அருந்தும் நீர் பாதுகாப்பு தொடர்பில் ஆளுநர் என்றவகையில் உரிய பொறுப்பை நிறைவேற்றுவேன்.

வட மாகாண நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை வடக்கு மக்களுக்கு விநியோகிக்கும் குடிநீர் பாதுகாப்பானதா என்பது தொடர்பில் ஒரு வாரத்துக்குள் அறிக்கை தர வேண்டும்.

அதுமட்டுமல்லாது பிரதேச சபைகள் ஊடாக வழங்கப்படும் குடிநீர் தொடர்பில் அறிக்கை தருமாறு செயலாளருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளேன்.

அதுமட்டுமல்லாது, வட மாகாணத்தில் பொதுமக்களுக்கான குடிநீர் விநியோகம் மேற்கொள்ளும் பிரதேச சபைகள் மாகாண மற்றும் மத்திய அமைச்சின் கீழ் செயல்படும் அனைத்து நிறுவனங்களும் 13 வாரத்துக்கு ஒரு தடவை குடிநீரின் தர நிர்ணயம் தொடர்பில் அறிக்கை வழங்கவேண்டும்.

அது மட்டுமல்லாது வட மாகாணத்திலுள்ள 5 மாவட்டங் களிலும் உள்ள பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்கள் பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் பொது மக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் தொடர்பில் ஆய்வு அறிக்கை வழங்க வேண்டும்.

குறித்த செயற்பாட்டை வட மாகாண பிரதம செயலாளர் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் ஆகியோர் கண்காணிக்க வேண்டும் என பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

## தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையால் தரமற்ற 67 மருந்துகள் கண்டுபிடிப்பு

மருந்து உற்பத்தி நிறுவனங்கள், விற்பனையகங்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் 67 மருந்துகள் தரமற்றவையாக இருந்ததாக தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை அறிவித்துள்ளது.

அவற்றில் பெரும்பாலானவை ஹிமாசல பிரதேசம், உத்தரகாண்ட், ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்களில் தயாரிக்கப்பட்டவை. நாட்டில் விற்பனை செய்யப்படும் அனைத்து வகையான மருந்து - மாத்திரைகளும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை மூலம் ஆய்வுசெய்யப்படுகின்றன. அதேபோல், போலி மருந்துகளும் கண்டறியப்பட்டு, அதன்பேரில் உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

அதன்படி, கடந்த மாதத்தில் மட்டும் 1,348 மருந்துகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. அவற்றில் காய்ச்சல், சளி, கல்சியம், இரும்புச்சத்து, உயர் இரத்த அழுத்தம், ஜீரண மண்டல பாதிப்புக்கு பயன்படுத்தப்படும் 67 மருந்துகள் தரமற்றவையாக இருந்தமை கண்டறியப்பட்டது.

இதையடுத்து அதன் விவரங்களை தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் cdsco.gov.in என்ற இணையப் பக்கத்தில் வெளியிட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# வவுனியா வைத்தியசாலை ஊழியர்கள் போராட்டம்





வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை சிற்றூளியர்கள் பல்வேறு கோரிக்கைளை முன்வைத்து நேற்று (23) காலை 9.30 மணியளவில் வைத்தியசாலை நுழைவாயிலுக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் முறையற்ற நியமனத்தினை வழங்குவதை நிறுத்து, வாழ்வாதாரத்தை அதிகரி, வங்கியில் அதிகரித்த வட்டி வீதத்தை குறை, ஊழியர் பற்றாக்குறையை உடன் நிவர்த்திசெய் போன்ற பல்வேறு வாசகங்களை தாங்கிய பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

குறித்த போராட்டம் பேரணியாக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பிரதான நுழைவாயிலிருந்து ஆரம்பமாகி சுற்றுவட்டத்தினூடாக ஏ9 வீதியிலுள்ள வைத்தியசாலையின் ஊழியர் நுழைவாயிலை வந்தடைந்து கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றிருந்தது.

## இரத்மலானை விமானப்படைத் தளத்தில் திருடப்பட்ட துப்பாக்கி – தோட்டாக்கள் மீட்பு

இரத்மலானை விமானப்படைத்தளத்திலிருந்து திருடப்பட்ட ரி-56 துப்பாக்கி மற்றும் 120 தோட்டாக்கள் பாணந்துறை அங்குருவாதோட்ட கெசல்ஹேனாவ பிரதேசத்திலுள்ள மரக்கறி தோட்டத்தில் புதைக்கப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் அடங்கிய மகசீன் என்பவற்றை திருடியதாக விமானப்படை சார்ஜன்ட் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் கடந்த 20ஆம் திகதி இந்தத் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளார். சந்தேக நபர் கல்கிஸை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

## வீதி விளக்குகளுக்கான மின் கட்டணங்களை இனிமேல் வீதி அதிகாரசபை செலுத்தாது

வீதிகளின் இருமருங்கிலும் பொருத்தப்பட்டுள்ள வீதி விளக்குகளுக்கான மின் கட்டணங்களை குறித்த நகர மற்றும் பிரதேச சபைகளே எதிர்காலத்தில் செலுத்தவேண்டி ஏற்படுமென வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதுவரை குறித்த கட்டணங்களை வீதி அபிவிருத்தி அதிகாரசபையே செலுத்தி வருவதாக அதன் பணிப்பாளர் நாயகம் எல்.வீ.எஸ்.வீரகோன் தெரிவித்தார்.

வீதி பராமரிப்புப் பணிகள் தற்போது சிரமமான நிலையிலேயே முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

# வவுனியாவில் 400 போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது

வவுனியாவில் போதையை ஏற்படுத்தக்கூடிய மருந்துகளை விற்பனைசெய்த ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளதுடன், அவரிடமிருந்து 400 மருந்து வில்லைகளையும் கைப்பற்றியுள்ளனர்.

போதையினை ஏற்படுத்தக்கூடிய மருந்து விற்பனை செய்வதாக போதை தடுப்பு மற்றும் ஊழல் ஒழிப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜே.ஏ.ஏ.எஸ்.ஜெயக்கொடியின் ஆலோசனையில் உப பொலிஸ் பரிசோதகர் மதுசங்கவின் வழிகாட்டலில் பொலிஸ் சார்ஜன் ஹேரத் (14692), பொலிஸ் கான்ஸ்டபிள்களான ரணில் (81010), சமிந்த (82175), மிதுசன் (91800), தினேஸ் (99172) ஆகியோர் அடங்கிய குழுவினர் திருநாவற்குளம் பகுதியில் குறித்த நபர்களை மறித்து சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது அவரின் உடமையிலிருந்து PREGABALIN CAPSULES GABIN-150 என்ற போதையையேற்படுத்தக்கூடிய 400 மருந்து வில்லைகளை கைப்பற்றியதுடன், குறித்த மருந்துகளை வைத்திருந்த 23 வயதுடைய இளைஞனை பொலிஸார் கைதுசெய்தனர்.

PREGABALIN CAPSULES GABIN-150 என்ற குறித்த மருந்துகள் அளவிற்கு அதிகமாக உட்கொள்ளும் சமயத்தில் போதையை ஏற்படுத்தக்கூடியது எனவும் மருந்தகங்களில் 20 ரூபா தொடக்கம் 50 ரூபாவிற்குள் விற்பனை செய்யப்படும் மருந்தை இவர்கள் 500 ரூபா தொடக்கம் 600 ரூபா வரையில் விற்பனை செய்வது பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளதுடன், சந்தேக நபரை வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# தொழிற்கல்வி இல்லாத கட்டுமானத் தொழிலாளர்களுக்கு தேசிய தொழில் தகுதிச் சான்றிதழை வழங்க நடவடிக்கை



கட்டுமானத் துறையில் அனுபவம் உள்ள கைவினைஞர்கள் - ஆனால், முறையான தொழிற்கல்வி இல்லாதவர்களுக்கு தேசிய தொழில்திறன் சான்றிதழ்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுக்களின் (TVEC) ஒப்பந்தத்தின்படி, இது செயற்படுத்தப்படும்.

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் ஆர்.எச்.ரூவின்ஸ் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கே.ஏ.லலிததீர, இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு நேற்று முன்தினம் (22) கையொப்பமிட்டுள்ளார்கள். இது கொழும்பு 07, சவ்சிறிபாயவில் அமைந்துள்ள நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் நடைபெற்றது.

இந்த ஒப்பந்தத்தின் ஊடாக, முன் அறிவு மதிப்பீட்டு முறையின் (RPL) கீழ் கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் NVQ நிலை 3 - நிலை 4 தேசிய தொழில்சார் சான்றிதழ்களை வழங்குவதற்கு நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபைக்கு அதிகாரம் உண்டு. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரைக்கமைய இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு கட்டுமானத் துறைகளுக்குத் தேவையான கட்டுமானத் தொழிலாளர்களுக்கு முறையான அதிகாரமளித்தல் இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம். இது திறமையான கட்டுமானத் தொழிலாளர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட தொழில் கல்விச் சான்றிதழை வழங்குதல், பொதுத்துறையில் டிப்ளோமா படிப்புகள் மற்றும் பட்டங்களைத் தொடர உதவுதல் அல்லது வெளிநாட்டு வேலை வாய்ப்புகள், கட்டுமானத்துறையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குப் பரிந்துரைத்தல் பதவி உயர்வு பெறுவது உள்ளிட்ட பயன்களைக் கொண்டுள்ளது.


இங்கு நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் சஞ்சீவ ஜயசுந்தர இங்கு கருத்து தெரிவிக்கையில்,

"தற்போது இலங்கையில் சுமார் 5 முதல் 6 இலட்சம் கட்டுமானத் தொழிலாளர்கள் உள்ளனர். இவர்களில் 95% பேருக்கு தகுதி இருந்தும் முறையான சான்றிதழ் இல்லை. எனவே, அவர்களுக்கு அந்தச் சான்றிதழைக் கொடுக்க விரைவில் தேவையான அமைப்பை தயார் செய்வோம் என நம்புகிறோம்.

திறமையான கட்டுமானத் தொழிலாளர்களுக்கு சான்றிதழ் மற்றும் அடையாள அட்டை வழங்கும் திட்டத்தை எங்கள் நிறுவனம் ஏற்கனவே தொடங்கியுள்ளது. அடையாள அட்டை சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையில் வழங்கப்படுகிறது. நாட்டின் நிலவும் பொருளாதாரச் சூழ்நிலையின் அடிப்படையில் திறமையான கட்டுமானத் தொழிலாளர்களை முறையாகப் பயிற்றுவித்து, அவர்களுக்கு சர்வதேச வாய்ப்புகளை வழங்குவதற்கான வேலைத்திட்டத்தை தயாரித்து வருகிறோம். அதில், நாட்டில் தற்போதுள்ள டொலர் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும்" - என்றார்.

நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் பிரதி பணிப்பாளர் நிரோஷ் வடகரவத்த, உதவிப் பணிப்பாளர் டி.கிரிஷானி, மூன்றாம் நிலைக் கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு பணிப்பாளர் அஜித் பொல்வத்த, உதவிப் பணிப்பாளர் சமன்மலி உதயகாந்தி மற்றும் அதிகாரிகள் குழுவினர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## தேர்தல் ஆணையாளர் அலுவலகத்துக்கு பணம் அனுப்பிய யாழ். இளைஞர்



யாழ். சுண்டுக்குளியில் வசிக்கும் இளைஞர் ஒருவர் தேர்தல் ஆணையத்திற்கு பணத்தினை அனுப்பியுள்ளார்.

அனைவரும் ஒத்துழைப்பு செய்வோம், தேர்தலை நடத்த ஒத்துழைப்போம், சிறு துளி பெருவெள்ளம் ஆகட்டும், தேர்தலை நடத்தி ஜனநாயகத்தை நிலைநாட்டுவோம் எனக் கோரி அவர் இவ்வாறு பணத்தை அனுப்பியுள்ளார்.

தேர்தல் ஆணையக்குழுவுக்கு தேர்தலை நடத்துவதற்கு பணம் வழங்காத காரணத்தினால் யாழ்ப்பாணம் சுண்டுக்குளி பகுதியில் வசிக்கும் இளைஞன் ஒருவர் காசுக்கட்டளை மூலம் 500 ரூபா பணத்தினை இவ்வாறு அனுப்பியுள்ளார்.

# எட்டாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும்

# புத்தளம் - தீபி கலா மந்திர்

**தொகுப்பு : கேஜி**

புத்தளம் மாவட்டத்தில் மொழி ரீதியாக அதிகமான தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்தாலும் தமிழ், சைவம், தமிழர் கலை,கலாசார, பண்பாட்டு, விழுமியங்களை முன்னெடுப்பதில் பின் தங்கிய நிலையிலேயே காணப்படும் புத்தளம் மாவட்டத்தில் இசை, நடனம், இசைக்கருவிகளை பயிலுவதற்கான வாய்ப்பு என்பது குறைவான நிலையே காணப்படுகிறது.

இதனை கருத்திற்கொண்டு இசை, நடனம் மற்றும் வாத்தியக் கலைஞர்களை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் 2015ஆம் ஆண்டு தைப்பூச நன்நாளில் தொடங்கப்பட்டதே "தீபி கலா மந்திர்" இம்மன்றமானது ஆரம்ப காலத்தில் "கானாம்ருத லயா இசைப்பள்ளி" என்ற பெயருடன்தான் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் இதனை ஸ்தாபித்த இரட்டைச் சகோதரிகளில் ஒருவரின் இறப்புக்குப் பின்னர் அவரது நினைவாக "தீபி கலா மந்திர்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டு ஆரம்ப காலத்தில் சங்கீத பாடம் மட்டுமே நடைபெற்றது.

**ஸ்தாபகர் ரூபி கனகரட்னம்**

2012 - 2014 வரை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் உயர் கல்வியைக் கற்ற பின் 2015இல் வைகாசி 13 ஆசிரிய நியமனம் கிடைத்தது. ஆனால், நியமனம் கிடைப்பதற்கு முன்னரே 2015 தைப்பூச நாளில் கானாம்ருத லயா இசைப்பள்ளி 5 மாணவர்களோடு புத்தளம் / தில்லையடி வள்ளி தேவசேனா சமேச சிவசுப்ரமண்ய தேவஸ்தானத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இக்காலத்தில் கற்பித்தலுக்கு என்று தனியான ஓர் இடம் காணப்படவில்லை. எனவே, தில்லையடி வள்ளி தேவசேனா சமேத சுப்ரமணிய ஆலயத்திலேயே கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெற்றன. ஆரம்பத்தில் மாணவர் சேர்க்கை என்பது குறைவாகவே காணப்பட்டது. இருப்பினும், தொடர்சியாக வகுப்புகள் நடைபெற்றதுடன், மாணவர் சேர்க்கையை அதிகரிப்பதற்காக புத்தளம் இந்து மகா சபை மற்றும் பாச்சான் ஓடை ஐயனார் ஆலயம், தில்லையடி முருகன் ஆலயம் போன்ற இடங்களுக்குச் சென்று ஞாயிற்றுக்கிழமை அறநெறி கற்பித்தலுக்குப் பின்னரான நேரத்தில் சங்கீத கற்பித்தல் பயிற்சிகளை மேற்கொண்டார் ஆசிரியர் ரூபி கனகரட்னம்.

அதன்பின்னர் மாணவர் சேர்க்கையில் முன்னேற்றம் காணப்பட்டது. ஆனால், மன்றத்திற்கென ஓர் இடவசதியில்லாதது ஒரு பிரச்சினையாக இருந்தது. 2018இல் ஸ்தாபகர், ஆசிரியர் ரூபி கனகரட்னத்தின் வீட்டுக் காணியில் பலகையால் கட்டி ஓலை வேயப்பட்ட சிறு வகுப்பறை ஒன்றை உருவாக்கி 2019 வரையான காலப்பகுதியில் அங்கேயே கற்றல் கற்பித்தல் நடைபெற்றது.

பின்னர் இவ்விடம் 2019இல் கல்லால் சுவர் எழுப்பி நிர்மாணம் செய்யப்பட்டது. இவ்வாண்டே மன்றத்தில் நடன வகுப்பும் இணைக்கப்பட்டது. நடன ஆசிரியராக ஆசிரியர் ரூபி கனகரட்னத்தின் இளைய சகோதரி ஹர்ஷேகா கனகரட்னம் இணைந்துகொண்டு இன்றைய காலம்வரை கற்பித்துக்கொண்டிருக்கிறார். இவர் யாழ். இராமநாதன் பல்கலைக்கழகத்தில் நடனத்தில் "நுண்கலைமாணி" பட்டப்படிப்பு பயின்றுகொண்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், 2020ஆம் ஆண்டில் வயலின் வகுப்பும் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாண்டு கொவிட்-19 பெருந்தொற்றால் கற்றல் நடவடிக்கைகள் சற்று பின்னடைவைக் கண்டபோதும் நிகழ்நிலையூடாக (Zoom) வகுப்புகள் தொடர்ச்சியாக நடைபெற்றன.

2021இல் பாரதியாரின் 100ஆவது நினைவுதினத்தினையொட்டி நிகழ்நிலையூடாக (Zoom) போட்டிகள் நடைபெற்றன.

1. பாரதியார் வாழ்க்கை தொடர்பான வினாவிடைப் போட்டி
2. பேச்சுப் போட்டி
3. பாரதியார் பாடல் போட்டி/ பாரதியார் பாடலுக்கான நடனப் போட்டி

யாழ்ப்பாணம் மற்றும் மன்னாரிலிருந்து இதற்கு நிகழ்நிலையூடாகவே நடுவர்கள் இணைந்துகொண்டார்கள். அதனைத் தொடர்ந்து 2021 நவராத்திரியை முன்னிட்டு தொடர்ச்சியாக பத்து நாட்கள் மாணவர்களின் கலை நிகழ்வுகள், வீடியோ பதிவாக வெளியிடப்பட்டன. புத்தளம் Zoom video நிறுவனத்தார் இதனை வெளியிட்டிருந்தனர். கலை தொடர்பான செயற்பாடு என்பதால் இலவசமாக வீடியோ பதிவுகளை செய்துதந்தனர் என்பது பாராட்டத்தக்கது.

2021ஆம் ஆண்டு ஆறாம் வருட நிறைவு விழா மன்றத்திலே கொண்டாடப்பட்டது. மாணவர்களின் நடத்தை திறன்களை மேம்படுத்துவதற்காக மாணவர்களுக்கு விருது வழங்கப்பட்டது.

உதாரணமாக -

1. வகுப்பிற்கு சரியான நேரத்திற்கு வருபவர்.
2. பயிற்சிக் கொப்பிகளை தூய்மையாக வைத்திருப்பவர்.

இவ் விழாவிற்கு லண்டனில் வசிக்கும் சதாசிவம் என்பவர் பரிசில்களுக்கு உதவி செய்தார்.

2019 - 2023 வரையான காலப்பகுதியில் பாலர் பிள்ளைகளுகான இசைநூல் பயிற்சிப்புத்தகம்

மற்றும் தரம் 6, 7, தரம் 8, 9, தரம் 10, 11, தரம் 12, 13 வரையான வகுப்புகளுக்கான இசை பயிற்சிப்புத்தகங்கள் (ஆசிரியர் ரூபி கனகரட்னம்), நடன பயிற்சிப் புத்தகம் ( செல்வி ஹர்சேக்கா கனகரட்னம்) என்பன இம்மன்றம் சார்பில் உருவாக்கப்பட்டது.

இவ்வருடம் தீபி கலா மந்திர் மன்றத்தின் எட்டாவது நிறைவையொட்டி மாணவர்களின் கலை நிகழ்வுகள், அரங்கில் கொண்டாடப்படவிருக்கின்றது. ஆரம்பத்தில் 5 மாணவர்களோடு ஆரம்பிக்கப்பட்ட வகுப்பில் தற்போது 48 மாணவர்கள் இம்மன்றத்தினரோடு தொடர்ச்சியாக பயணிக்கிறார்கள் என்பது இம்மன்றத்தினரின் வளர்ச்சிக் குறியீடாகும்.

மேலும் 2022இல் இம்மன்றத்தில் பயின்ற உயர்தர மாணவர்கள் மூவரும் சிறந்த பெறுபேற்றைப் பெற்றிருந்தனர்.

2 A சித்தியும், 1 B சித்தியும் பெற்று யாழ். இராமநாதன் பல்கலைக்கழகத்திற்கும், மட்டக்களப்பு விபுலானந்தா இசைக் கல்லூரிக்கும் தெரிவாகி இருக்கின்றனர்.

கலையில் மாணவர்களுக்கு ஆர்வத்தை தூண்டி ஆக்க சிந்தனைக்கான வழிகாட்டியாக இருந்து புத்தளம் மாவட்டத்தில் கலை வளர்ச்சியை காணவேண்டும் என்பதே தீபி கலா மன்ற ஸ்தாபகர் ரூபி கனகரட்னத்தின் அவாவும் பிரார்த்தனையும் ஆகும்.

இதுவரைகாலமும் மன்றத்தின் செயற்பாடுகளில் ஆளணி உதவி மற்றும் பொருளாதார வகையிலும் பலர் எமக்கு உதவி செய்து இருக்கிறார்கள். இன்றைய காலம் வரை இணைந்து செயற்படும் ஆசிரியர் ரூபி கனகரட்ணத்தின் பெற்றோரின் பங்களிப்பும் துணைவர் பார்த்திபனின் பங்களிப்பும் மகத்தானது. இதுவரை தீபி கலா மன்றத்தோடு இணைந்து பயணித்த அனைவருக்கும் உதவி புரிந்த அனைவருக்கும் இம்மன்றத்தின் சார்பாகவும் இம்மன்றத்தின் ஸ்தாபகர் ரூபி கனகரட்ணத்தின் சார்பாகவும் நனறிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு ஈழத்தில் சைவமும் தமிழும் தழைத்தோங்க தன்னை அர்ப்பணித்துள்ள ரூபி கனகரட்ணத்தை ஈழ்த்து தமிழ்ச் சமுகம் மனமுவந்து பாராட்டுகிறது.




இசை விருது பெற்ற மாணவ மாணவியர்கள்...



தீபி கலா மந்திர் ஸ்தாபகரும் ஆசிரியரும் ரூபி கனகரட்னம்



ஆசிரியர்கள் ரூபி, ஹர்ஷேகா மற்றும் அவர்களின் தாயார்



சூம் வகுப்புகள்...







தீபி கலா மந்திர் பயிற்சி வகுப்புகள்...







ஆசிரியர்கள், மாணவ மாணவியர்கள்...

# பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து சாவகச்சேரி வைத்தியசாலை பணியாளர்கள் போராட்டம்

(சாவகச்சேரி நிருபர்)

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் சுகாதாரப் பணியாளர்கள் நேற்று (23) வியாழக்கிழமை காலை வைத்தியசாலை முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்திருந்தனர்.

"மேலதிக நேரக் கொடுப்பனவை வரையறுக்கும் சுற்றறிக்கையை நீக்கல்,வாரத்தில் ஐந்து நாட்களை மட்டுமே வேலை நாட்களாக பிரகடனப்படுத்தல், அதிகரித்துள்ள மின் கட்டணத்தை குறைத்தல், பொது நிர்வாக சுற்றறிக்கையின்படி அனைத்து சுகாதார ஊழியர்களுக்கும் விசேட விடுமுறை வழங்குதல், நியாயமற்ற வரிக்கொள்கையை ஒழித்தல், நியாயமற்ற ரீதியாக அதிகரித்த வட்டி வீதத்தைக் குறைத்தல், மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களின் பற்றாக்குறையை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டும்" உள்ளிட்ட ஒன்பது கோரிக்கைகளை முன்வைத்து வைத்தியசாலை முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.



காலை 8 மணிமுதல் 12 மணிவரை சுகாதாரப் பணியாளர்களால் குறித்த கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஜப்பான் தூதரக அரசியல் ஆலோசகர் - முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா சந்திப்பு



(வட்டுக்கோட்டை செய்தியாளர்)

ஜப்பான் தூதரக அரசியல் ஆலோசகர் முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனை சந்தித்து வடக்கின் நிலைவரம் குறித்து ஆராய்ந்தார்.

தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்தும் வட மாகாணத்தில் நிலைமை தொடர்பாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சருமான திருமதி விஜயகலா மகேஸ்வரனை ஜப்பான் தூதரகத்தின் அரசியல் ஆலோசகர் கானா மொரிவகி நேற்றுமுன்தினம்(22) சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

கொழும்பிலுள்ள திருமதி விஜயகலா மகேஸ்வரனின் இல்லத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் வட மாகாணத்தின் தற்போதைய நிலைவரம் குறித்து ஜப்பானிய தூதரக அதிகாரி கேட்டறிந்துள்ளார்.

அவரிடம் தேசிய மற்றும் வடக்கின் அரசியல் நிலைவரம் தொடர்பாகவும் மக்களின் பிரச்சினைகள் குறித்தும் இந்தச் சந்திப்பின் போது எடுத்துக் கூறியுள்ளார்.

# நல்லை ஆதீன குருமுதல்வருடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சந்திப்பு



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று (23) வியாழக்கிழமை நல்லை ஆதீன குருமுதல்வர் சோமசுந்தர ஞானதேசிக பரமாச்சார்ய சுவாமிகளை நல்லூரிலுள்ள நல்லை ஆதீனத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இச்சந்திப்பின்போது செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன், எதிர்க்கட்சித் தலைவரின் ஒருங்கிணைப்புச் செயலாளரும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பேச்சாளருமான உமாச்சந்திரா பிரகாஷ், யாழ். – கிளிநொச்சி தேர்தல் மாவட்ட அமைப்பாளர் விஜய்காந்த், யாழ். மாவட்ட அமைப்பாளர் கு.மதன்ராஜ், தொகுதி அமைப்பாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# யாழில் 57 வருடங்களின் பின்னர் இருவருக்கு பேடன் பவல் விருது

(யாழ். நிருபர்)

சாரணர் இயக்கத்தின் இளைஞர் சாரணிய பிரிவாக செயற்படும் திரிசாரணர் பிரிவில் வழங்கப்படுகின்ற உயரிய விருதான பேடன் பவல் விருது, 57 வருடங்களின் பின்னர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் திரிசாரணர்கள் இருவருக்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

சாரணர் இயக்கத்தின் பேடன்பவல் பிரபுவின் பிறந்த தினத்தை முன்னிட்டு இலங்கை சாரணர் சங்கத்தினால் மாத்தளை மாவட்ட செயலகத்தில் மாத்தளை மாவட்ட செயலகத்தில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த விசேட



நிகழ்வொன்றிலேயே இலங்கை சாரணர் சங்கத்தின் பிரதம ஆணையாளர் குறித்த விருதுகளை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் திரிசாரணர் குழுவில் சிறப்பாக செயற்பட்டு அனைத்து தகைமைகளையும் நிறைவுசெய்த யோ.சுதர்சனன் மற்றும் ப.சாரங்கன் ஆகியோருக்கு வழங்கினார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 200ஆவது ஆண்டை இவ்வருடம் கொண்டாடும் நிலையில் இவ்விருது 57வருடங்களின்பின்னர் கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.



நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் மீள்நிர்மாணம் செய்யப்பட்ட அரும்பொருட்காட்சியகம் மற்றும் அறிவாலய கட்டிடம் நேற்று முன்தினம் (22) பாவனைக்காக அறங்காவலர் சபையினரால் கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது. ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து ஆலயத்திலிருந்து படம் எடுத்து செல்லப்பட்டு, அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டது. (யாழ். நிருபர்)

# நுவரெலியா பிரதான நகரங்களில் முட்டைக்கு பெரும் தட்டுப்பாடு

## அதிக விலைக்கு விற்கப்படுவதாகவும் குற்றச்சாட்டு

ஆ.ரமேஸ்

நுவரெலியா, கந்தப்பளை, இராகலை, உடப்புஸ்சலாவை ஆகிய பிரதான நகரங்களில் கடந்த இரண்டு தினங்களாக முட்டைக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுகிறது.

இதன் காரணமாக வெதுப்பகங்கள், ஹோட்டல்களில் முட்டைகள் பாவித்து செய்யப்படும் உணவு வகைகள் மற்றும் வெதுப்பி உணவு வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், முட்டைகளுக்கு கடந்த காலங்களை விட கணிசமான விலை குறைப்பு ஏற்பட்டு நிர்ணய விலையில் முட்டைகள் விற்பனை செய்யப்பட்டபோதும் தற்போது முட்டைகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றன. இந்த நிலையில் நுகர்வோரும் தங்களது வீட்டு சமையலுக்கு முட்டைகளை பெற்றுச் செல்வதில் சிரமத்தை அனுபவிப்பதாக சுட்டிக்காட்டுகின்றனர்.

அதேநேரத்தில், இராகலை மற்றும் உடப்புஸ்ஸலாவ பிரதான நகரங்களில் ஒரு சில சில்லறைக்கடைகள் மற்றும் கோழி இறைச்சி விற்பனை நிலையங்களில் வெள்ளை நிற முட்டைகள் விற்பனை செய்யப்படுகின்ற போதிலும் ஒரு முட்டையின் விலை 55 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு வெள்ளை முட்டை விற்பனை செய்யப்படுவது தொடர்பில் நுவரெலியா மாவட்ட நுகர்வோர் அதிகார சபைக்கு அறிவித்தபோதிலும் உரிய நடவடிக்கை எடுத்ததாக தெரியவில்லை என நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

# சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் இலவச சத்துணவு வழங்கும் திட்டம்

## மார்ச் முதலாம் திகதி அமைச்சர் ஜீவன் தலைமையில் ஆரம்பம்

மலையக பெருந்தோட்டப் பகுதிகளில் சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் பராமரிக்கப்படும் குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கும் வேலைத்திட்டம் எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது.

மேற்படி இலவச உணவுத் திட்டத்தின் மூலம் முதற்கட்டமாக 15 ஆயிரம் சிறார்கள் பயன்பெறுவார்கள். அதன்பின்னர் ஏனையோரையும் உள்வாங்குவதற்கான பொறிமுறை உருவாக்கப்பட்டுள்ளது.

உலக சுகாதார அமைப்பு, உலக உணவுத் திட்டம் ஆகியவற்றின் பரிந்துரைகளுக்கமைய, சுகாதார மருத்துவ அதிகாரிகளின் கண்காணிப்பின் கீழ், சுகாதார பரிசோதகர்கள் மற்றும் தோட்ட அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் குறித்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.



இதற்கான முழுமையான பங்களிப்பை பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிறுவனம் வழங்குகின்றது.

நாட்டில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், மக்கள் மத்தியில் பட்டினி வீதமும் அதிகரித்துள்ளது. மலையகத்தில் இந்நிலைமை மோசமாகவுள்ளது. அத்துடன், சிறார்கள் மத்தியில் போஷாக்கின்மை பிரச்சினையும் காணப்படுகின்றது.

இவற்றை நிவர்த்தி செய்யும் ஓர் நடவடிக்கையாகவே அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஆலோசனைக்கமைய, இலவச சத்துணவு வேலைத்திட்டம் சிறார்களுக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கி உட்பட சர்வதேச அமைப்புகள், மகளிர் விவகார மற்றும் சிறுவர் விவகார அமைச்சு உட்பட உள்நாட்டு ஸ்தாபனங்களையும் இணைத்துக்கொண்டு குறித்த வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என்று பிரஜா சக்தி அபிவிருத்தி திட்டத்தின் பணிப்பாளர் நாயகம் பாரத் அருள்சாமி தெரிவித்தார்.




பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கத்தின் அறிவொளி வளையத்தின் பூரண அனுசரணையோடு பதுளை பிரண்ட்லிஷிப் அமைப்பினரினால் விசேட தேவையுடையோருக்கான சக்கர நாற்காலி வழங்கும் நிகழ்வு பதுளை வை.எம்.எம்.ஏ மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விசேட அதிதிகளாக பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கத்தின் தலைவர் சோதிரட்ணம் நிரஞ்சன், இளம் கண்டுபிடிப்பாளர் சோ.வினோஜ்குமார், பிரண்ட்லிஷிப் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (படம்: நடராஜா மலர்வேந்தன்)

# பண்டாரவளையில் லொறி விபத்து

## 22 தொழிலாளர்கள் காயம்

(பதுளை செய்தியாளர்)

பண்டாரவளை, மல்வத்த தோட்டப் பகுதியில் வேலைக்குச் சென்று மீண்டும் வீடு திரும்பும் போது பெருந்தோட்டத் தொழிலாளர்கள் பயணித்த லொறி விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்த விபத்தில் சாரதி உட்பட 22 பேர் காயமடைந்துள்ளதாக பண்டாரவளை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு காயமடைந்தவர்களில் 19 பெண்களும், 3 ஆண்களும் அடங்குகின்றனர்.

அவர்கள் பண்டாரவளை மற்றும் தியத்தலாவை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தடுப்பு தொகுதி செயற்படாமல் போனமையினால் குறித்த லொறி வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

# ஏழு வயது சிறுமி துஷ்பிரயோகம்: தாயும் சந்தேக நபரும் கைது!

## கட்டுகஸ்தோட்டையில் சம்பவம்

(கண்டி செய்தியாளர்)

ஏழு வயது சிறுமி ஒருவருக்கு பாலியல் சேட்டைகள் செய்த ஒருவரும் சிறுமியின் தாயும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தில் நடந்த இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது-

மேற்படி சம்பவத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட பெண்ணின் கணவன் சுமார் இரண்டு வருடங்களுக்கு முன் மரணமடைந்த நிலையில் அப் பெண் பேஸ்புக் மூலம் கிடைத்த ஆண் நண்பர் ஒருவருடன் மிக நெருக்கமாகப் பழகிவந்துள்ளார்.

அந்நபர் அடிக்கடி அந்தப் பெண்ணின் வீட்டுக்கு சென்று வந்ததுடன் தொடர்புகளை பேணியும் வந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ தினம் அப் பெண்ணின் 7 வயது மகளிடம் தாயின் கள்ளக்காதலன் பாலியல் சேட்டைகள் பல புரிந்ததாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு சிறுமியின் தாய் துணையாக இருந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சிறுமி, நடந்த சம்பவம் பற்றி தனது மாமி முறையான ஒருவரிடம் தெரிவித்துள்ளார். அப் பெண் சிறுமியின் பாட்டியிடம் விடயத்தைக்கூறி அதன் பிறகு கட்டுகஸ்தோட்டை பொலிஸ் நிலைய மகளிர் மற்றும் சிறுவர் பாதுகாப்புப் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அவர்கள் மேற்கொண்ட முறைப்பாட்டை அடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின்படி தாயும் கள்ளக் காதலனும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# குப்பை கூளங்கள் தொடர்பில் தீர்வு கொடுத்த உடப்பு பொலிஸ்












உடப்பு - புளிச்சாக்குளம் பிரதான வீதியின் இருமருங்கிலும் கொட்டப்படும் குப்பைகள் குறித்து ஏற்கனவே 'தமிழன்' பத்திரிகையில் வெளிவந்த செய்தி தொடர்பில் ஆராச்சிகட்டு பிரதேச சபையின் தலைவர் தட்சணாமூர்த்தியின் கவனத்தின்கீழ் கொண்டுவரப்பட்டதன் பின்னர், மேற்படி இடத்தில் குப்பைகள், கழிவுகள் கொட்டப்படுவது தொடர்பிலும், அருகில் வசிக்கும் குடியிருப்பாளர்களின் சுகாதார பிரச்சினைகள் மற்றும் அந்த வீதியினூடாக போக்குவரத்து செய்வோரின் நிலைமை குறித்தும் கவனம் செலுத்துமுகமாக அந்த இடத்தில் குப்பைகளை அகற்றி இனி "அனுமதி இல்லாமல் குப்பைகள் போட வேண்டாம்" என அறிவிப்புப் பலகை நாட்டப்பட்டிருந்தபோதும் அது பலனளிக்க வில்லை.

மீண்டும் அவ்விடம் குப்பைகள் நிறைந்து அசுத்தமான பிரதேசமாகவும் மட்டுமல்லாது வெளி இடங்களிலிருந்து வந்து குப்பைகளை கொட்டும் பிரதான இடமாக மாறி அருகிலுள்ள கடலோடு கடக்கும் ஆற்றுநீரில் குப்பைகள் கலந்து அவை கடலோடு கலந்தும் வருகின்றன. மேலும் கால்நடைகள், பறவைகள் என்பன அந்த குப்பைகளை இழுத்து வீதியில் போட்டுவிட்டு செல்வதால் அப்பிரதேசத்தில் போக்குவரத்தில் ஈடுபடுவோர் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், அண்மையில் உடப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக பொறுப்பேற்றுக் கொண்ட ராஜகருணாவின் தலைமையில் உடப்பு 594, 594ஏ 594பி ஆகிய கிராமசேவகர் பிரிவிட்குட் பட்ட உடப்பு பொதுமக்கள் பாதுகாப்புக் குழு கூட்டத்தில் உடப்பின் பிரதான பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டபோது உடப்பு - புளிச்சாக்குளம் பிரதான வீதியின் இருமருங்கிலும் கொட்டப்படும் குப்பைகள் குறித்து பொலிஸ் அதிகாரியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்த அவர், கடந்த 20-02-2023 திங்கள் அன்று உடப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ராஜகருணா தலைமையில் உடப்பு பொலிஸ் நிலையத்திற்கு உட்பட்ட சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பிரிவு, உடப்பு பொலிஸ் பாதுகாப்புப் பிரிவின் பொலிஸ் உத்தியோகத்தர், பொதுமக்கள் பொலிஸ் பாதுகாப்புப் பிரிவின் 594, 594 ஏ, 594பீ ஆகிய கிராமசேவகர் பிரிவுகளுக்கு பொறுப்பான பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் கிராம சேவகர் ஆகியோரின் மேற்பார்வையில் ஆராச்சிகட்டுவ பிரதேச சபையின் சுகாதார சிற்றூழியர்களின் பங்குபற்றுதலுடன் உடப்பு பொதுமக்கள் பாதுகாப்புப் பொலிஸ் குழு உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடனும் உடப்பு புளிச்சாக்குளம் பிரதான வீதியின் இருமருங்கிலும் குவிக்கப்பட்டுள்ள குப்பை கூளங்களை அதே இடத்தில் பள்ளங்களில் நிரப்பி மேலே மண் இட்டு இடத்தைப் புதுப்பித்து எதிர்காலத்தில் இவ்விடத்தில் குப்பைகளை போடுவதை தடுக்கும் செயல்பாடு முன்னெடுக்கப்பட்டது.

மேலும் ஆராச்சிகட்டு பிரதேச சபையின் சுகாதார ஊழியர்கள் இப்பிரதேசத்தில்(உடப்பு ஐந்தாம் வட்டாரத்தில்) முறையாக குப்பைகளை சேகரித்து அகற்றுவதில்லை என்ற குற்றச்சாட்டும் நிலவி வருகிறது. அதற்குப் பொறுப்பான அதிகாரிகளை விசாரித்ததில் இப்பிரதேச மக்கள் குப்பை கூளங்களை முறையாக பிரித்து (மக்கும், மக்காத, கண்ணாடி, நெகிழி) தரப்படுத்தி தருவதில்லை என்றும் மனிதக் கழிவுகளை கூட இப்பிரதேச மக்கள் குப்பைகளோடு போடுவதாகவும், குறைந்தளவே ஊழியர்களை வைத்துக் கொண்டுள்ளதால் தங்களால் அந்த தரம் பிரிக்கும் வேலை செய்ய இயலாது என்றும் குற்றச்சாட்டை முன்வைத்ததன்பேரில், இது தொடர்பில் வீட்டுத் தொகுதிகளுக்கு முன்னால் ஒவ்வொரு குப்பைக்கும் வெவ்வேறு டஸ்பின்களை வைப்பதற்கான ஒழுங்குகளை செய்வதாக ஆராச்சிகட்டு பிரதேச சபை உறுதியளித்துள்ளது.

எனினும், இவ்விடத்தை தொடர்ந்து உடப்பு பொலிஸ் பிரிவிட்குட்பட்ட சுற்றுச்சூழல் பாதுகாப்பு பொலிஸ் பிரிவு கண்காணித்து வரும் என நம்பிக்கை அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்து தந்த உடப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ராஜகருணா இவ்வூர் மக்களின் வெகுவான பாராட்டுதல்களைப் பெறுகிறார்.

மேலும் இவர் இவ்வூருக்கு வருகை தந்ததன் பின்னர் ஊரின் பல்வேறு பொதுப் பிரச்சினைகள் தொடர்பில் உடப்பு பொதுமக்கள் பாதுகாப்புக் குழு ஊடாக தீர்வுகளை மேற்கொண்டு வருகின்றமை விசேட அம்சமாகும். மேலும் இவ்விடத்தில் குப்பைகளை தடுப்பதற்கான தொடர்ச்சியான பாதுகாப்பும் கண்காணிப்பும் மிக அவசியம்.

**(கே.ஜி - உடப்பு நிருபர்)**

# உலகக்கிண்ணப் போட்டிக்கு போர்த்துகலும் ஹெய்ட்டியும் தகுதிபெற்றன







**நி**யூஸிலாந்தில் நடைபெற்ற பிளேஓவ் போட்டிகளில் வெற்றிபெற்ற போர்த்துக்கலும், ஹெய்ட்டியும் முதன் முதலாக மகளிர் உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் விளையாடத் தகுதிபெற்றன.

புதன்கிழமை நடைபெற்ற பிளேஓவ் வெற்றிக்குப் பிறகு போர்த்துக்கல், ஹெய்ட்டி ஆகியனவும் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகியனவும் இணைந்து நடத்தும் மகளிர் உலகக்கிண்ணப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றன.

ஒக்லாந்தில் நடைபெற்ற பிளேஓவ் போட்டியின் குரூப் 'பி' பைனலில் சிலியை 2 -1 என்ற கோல் கணக்கில் த்ரில் வெற்றிபெற்ற ஹெய்ட்டி முதல் முறையாக எலைட் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளது.

இதற்கிடையில், ஹமில்டனில் நடந்த மகளிர் உலகக்கிண்ண பிளேஓவ் போட்டியில் போர்த்துகல் 2 -1 என்ற கோல் கணக்கில் கெமரூனை வீழ்த்தியது. இங்கிலாந்து, டென்மார்க் மற்றும் சீனாவுடன் குழு D இல் ஹெய்ட்டி இடம் பெறும்.

அமெரிக்கா, வியட்நாம் மற்றும் நெதர்லாந்துடன் குழு A இல் போர்த்துக்கல் இருக்கும். ஜூலை 20 முதல் ஒகஸ்ட் 20 வரை அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளில் உலகக்கிண்ணப் போட்டிகள் நடைபெறும்.

ஹாமில்டனில் நடைபெறும் சி குரூப் போட்டியில் பராகுவே பனாமாவை எதிர்கொள்ளும்போது போட்டியின் மற்றொரு இடம் இன்று வெளிக்கிழமை தீர்மானிக்கப்படும்.

# ஐ.பி.எல்.இல் இருந்து வெளியேறும் ஸ்டோக்ஸ்



**லா**ர்ட்ஸில் அயர்லாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டிக்குத் தயாராவதற்காக இங்கிலாந்து கெப்டன் பென் ஸ்டோக்ஸ் இந்தியன் பிரீமியர் லீக் (ஐ.பி.எல்.) இறுதிக் கட்டத்தில் வெளியேறுவார் என்று இங்கிலாந்து ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

2023 ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடர் மார்ச் 31ஆம் திகதிமுதல் மே 28ஆம் திகதிவரை நடக்கிறது. இதில், சென்னை சூப்பர் கிங்ஸ் அணி சார்பில் களமாடும் இங்கிலாந்தின் ஓல்ரவுண்டர் வீரரும், டெஸ்ட் அணியின் கெப்டனுமான பென் ஸ்டோக்ஸ் அயர்லாந்துக்கு எதிரான 4 நாள் போட்டியாக நடக்கும் டெஸ்ட் போட்டியில் தயாராவதற்காக தொடரின் இறுதிக் கட்டத்தில் வெளியேறுவார் என்று கூறப்படுகிறது.

ஆஷஸுக்கு முன் இங்கிலாந்தின் கடைசி டெஸ்ட் போட்டி இதுவாக இருக்கும். இது, ஐபிஎல் இறுதிப் போட்டிக்கு நான்கு நாட்களுக்குப் பிறகு ஜூன் 1ஆம் திகதி தொடங்குகிறது.

ஐபிஎல் தொடரில் பங்கேற்கும் ஜோப்ரா ஆர்ச்சர், மார்க் வுட், ஹாரி ப்ரூக், ஜானி பேர்ஸ் டோவ், ஜோ ரூட் போன்ற இங்கிலாந்து வீரர்களும் டெஸ்ட் அணியில் இடம்பிடித்துள்ளனர்.

சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் நீண்டகால கெப்டன் எம்.எஸ்.டோனி தனது கெப்டன் மற்றும் தொழில்முறை கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறவுள்ளார். அவரது கடைசிப் போட்டி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடக்கவிருக்கிறது. அவரைத் தொடர்ந்து சி.எஸ்.கே. அணியை பென் ஸ்டோக்ஸ் வழிநடத்துவார் என்று பேசப்பட்டது. இந்நிலையில், பென் ஸ்டோக்ஸ் தொடரின் கடைசி கட்டத்தில் வெளியேறுவார் என்று கூறப்படுகிறது.

கடந்த டிசம்பர் மாதம் கொச்சியில் நடைபெற்ற ஐ.பி.எல். மினி ஏலத்தில் கையில் ஜேமிசனை ஒரு கோடி என்கிற அடிப்படை விலைக்கு அவரை சென்னை அணி வாங்கியிருந்தது. இந்நிலையில், தற்போது இங்கிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் நியூசிலாந்தில் விளையாடிவரும் ஜேமிசன் இந்தத் தொடர் முடிந்த கையோடு முதுகு பகுதியில் ஏற்பட்டுள்ள காயம் காரணமாக அறுவை சிகிச்சை செய்துகொள்ளவுள்ளார்.

எனவே, அறுவை சிகிச்சைக்குப் பிறகு அவருக்கு ஓய்வு தேவைப்படும் என்பதனால் அவர் ஐபிஎல் தொடரிலிருந்து வெளியேறியுள்ளார் என்ற உறுதியான தகவல் வெளியாகியுள்ளது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# தனுஷ்கவுக்கு நிபந்தனைகள் தளர்வு



**அ**வுஸ்திரேலிய பெண்ணை பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக்கவுக்கு வழங்கப்பட்ட பிணை நிபந்தனைகளை தளர்த்த சிட்னி நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

அதன்படி, மீண்டும் வட்ஸ்அப்பை பயன்படுத்தவும், இரவில் வெளியே செல்லவும் அவருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

தனது பிணை நிபந்தனைகளை மாற்றுமாறு கோரி 31 வயதான குணதிலக்க நேற்று (23) மனுவொன்றை சமர்ப்பித்திருந்த நிலையிலேயே குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அவர் மீது நான்கு பாலியல் குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள நிலையில் அவர் அந்தக் குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொள்ள வில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.




**கொழும்பு, ஹமீட் அல்-ஹுசைனி கல்லூரியின் 2003 கல்விப் பொதுத் தராதர சாதாரண தர மாணவர்களால் ஏற்பாடுசெய்யப்பட்ட அணிக்கு எழுவர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி வெல்லம்பிட்டி கோதமி மாவத்தையில் அமைந்துள்ள மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது. இருபது அணிகள் பங்கேற்ற இந்தச் சுற்றின் இறுதிப் போட்டியில் குளோரியஸ் லெஜன்ட்ஸ் அணியை வீழ்த்தி எபர்ட்லெஸ் அணி வெற்றிபெற்றது. வெற்றிபெற்ற அணியின் தலைவர் எம். ரிகாஸ் போட்லட்ச் பிரைட்டர்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் எம். இம்தியாஸ் இலியாசிடமிருந்து கிண்ணத்தைப் பெற்றுக்கொள்வதையும் ஏற்பாட்டாளர்களான எச்.எம்.அக்பர் அலி, ஜே.ஆர்.எம். அருஸ் ஆகியோர் உடனிருப்பதையும் படத்தில் காணலாம்.**

# வவுணதீவில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை: இளைஞர்கள் இருவர் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள பெரியகாளைபோட்டமடு ஆற்றுப் பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையத்தை புதன்கிழமை (22) இரவு முற்றுகையிட்ட பொலிஸார், இரு இளைஞர்களை கைதுசெய்துள்ளதுடன் அவர்களிடமிருந்து 33ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்கான உபகரணங்களை மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விசேட புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து, வவுணதீவு பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் சம்பவதினம் இரவு குறித்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை முற்றுகையிட்டனர்.

இதன்போது கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சில்லுக்கொடியாறு பிரதேசத்தைச் சேர்ந்த 22, 23 வயதுடைய இரு இளைஞர்களை கைதுசெய்ததுடன் 33 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்கான உபகரணங்களையும் மீட்டதுடன், இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



பொத்துவில், நிந்தவூர், கல்முனை, கல்முனை வடக்கு, நாவிதன்வெளி மற்றும் காரைதீவு ஆகிய பிரதேச செயலகங்களுக்கான பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் ஒப்பமிடப்பட்ட இப்பதவிக்கான நியமனக் கடிதத்தை வியாழக்கிழமை (23) பிரதமர் தினேஷ் குணவர்தனவிடமிருந்து பெற்றுக் கொண்டார். (மாவடிப்பள்ளி செய்தியாளர்)

# 'விபுலானந்த சங்கீதம்' இசை இறுவட்டு வெளியீடு!







(கல்லடி செய்தியாளர்)

கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தினால் விபுலானந்த சங்கீதம் இசை இறுவட்டு நேற்று வியாழக்கிழமை (23) கல்லடி சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக இராசதுரை அரங்கில் இடம்பெற்றது.

அழகியற் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் கலாநிதி புளோரன்ஸ் பாரதி கென்னடி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு கல்லடி ஸ்ரீ ராமகிருஷ்ணமிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் நீலமாதவானந்தாஜீ மகராஜ் ஆசியுரை வழங்க, கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் ஓய்வு நிலை பேராசிரியர் மா.செல்வராசா முன்னிலை வகிக்க, கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்துகொண்டிருந்தனர்.

கிழக்குப் பல்கலைக்கழக ஓய்வு நிலைப் பேராசிரியர் சின்னையா மௌனகுரு, மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்களான திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த், திருமதி நவரூபரஞ்சினி முகுந்தன், மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழா சபைத் தலைவர் கணபதிப்பிள்ளை பாஸ்கரன் மற்றும் காரைதீவு விபுலானந்தர் ஞாபகார்த்தப் பணிமன்றத் தலைவர் வெற்றிவேல் ஜெயநாதன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலாளர்கள் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர்.

# நேரக்கணிப்பு குண்டு மீட்பு



(கனகராசா சரவணன்)

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள நாவற்குடா கலைமகள் வீதியிலுள்ள வீடொன்றுக்கு அத்திவாரம் தோண்டும்போது நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த நேரக்கணிப்பு குண்டு ஒன்று வெளிவந்த நிலையில் மீட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் புதன்கிழமையன்று (22) தெரிவித்தனர்.

குறித்த நிலப்பரப்பில் வீடுகட்டுவதற்காக அத்திவாரத்துக்கு நிலத்தை தோண்டும்போது பொலித்தீன் பையில் சுற்றிவைக்கப்பட்டிருந்த பார்சல் ஒன்று வெளிவந்த நிலையில் பொலிஸார் விசேட அதிரடிப்படை குண்டு செயலிழக்கும் பிரிவினர் நேரக் கணிப்பு குண்டை மீட்டனர். இவ்வாறு மீட்கப்பட்ட குண்டை நீதிமன்ற உத்தரவை பெற்று அதனை செயலிழக்க வைக்கும் நடவடிக்கையினை முன்னெடுத்துவருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# பாடசாலை நிர்வாகத்தை கௌரவித்த பெற்றோர்கள்







(காத்தான்குடி செய்தியாளர்)

காத்தான்குடி மெத்தைப்பள்ளி வித்தியாலயத்தில் கடந்த 2022ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் சித்தி பெற்ற ஏழு மாணவர்களின் பெற்றோர்கள் இணைந்து பாடசாலை அதிபர், வகுப்பாசிரியர்கள் மற்றும் ஏனைய ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவினர், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் ஆகியோருக்கு வாழ்த்துகள் தெரிவித்த நிகழ்வு செவ்வாய்க்கிழமை (21) பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

பெற்றோர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் மட்டக்களப்பு மத்தி வரலாற்றுப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் ஏ.ஜி.எம்.ஹக்கீம் (SLEAS) பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார். இதன்போது தரம் ஐந்து மாணவர்களின் பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இம்முறை வெளியான புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகளின்படி வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெறுபேறுகளைப் பெற்ற பாடசாலைகளின் வரிசையில் குறித்த பாடசாலை கோட்ட மட்டத்தில் 3ஆம் இடத்தையும் வலய மட்டத்தில் 6 ஆவது இடத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரமழானை சிறப்பிக்க ஏற்பாடுகள்

(நற்பிட்டிமுனை செய்தியாளர்)

மார்ச் மாத கடைசிவாரத்தில் ஆரம்பமாகவுள்ள புனித ரமழானைக் கொண்டாடும் முகமாக கிழக்கு பள்ளிவாசல்களில் துரித ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. டிரஸ்டிமார் சபைகள் ஒன்றுகூடி திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடி வருகின்றனர். பள்ளிவாசல் அழகுபடுத்தல், இரவுநேர தறாவீஹ் விசேட தொழுகை நடத்துதல், விசேட பாதுகாப்பு கஞ்சி வழங்குதல் இதில் அடங்குகின்றன.

பிறைகண்டு நோன்பு நோற்று பிறைகண்டு நோன்பு முடித்து பெருநாளைக் கொண்டாடும் இப்புனித மாதம் முஸ்லிம்களின் சிறப்புமிகு மாதமாகும். முஸ்லிம்கள் இம்மாதத்தில் கியாமுல் லைல் போன்ற நடுநிசித் தொழுகைகளில் ஈடுபட்டு பாவக்கறை அகற்றவும் உலகமக்களின் ஈடேற்றத்திற்கும் பிரார்த்தனைகளில் ஈடுபடுவது வழக்கமாகும்.

# கற்றல் உபகரணங்கள் வழங்கல்





(கிண்ணியா செய்தியாளர்)

சர்வதேச மனிதநேய அமைப்பான முஸ்லிம் எயிட் நிறுவனம் ஊடாக கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் நிகழ்வு கிண்ணியா காக்காமுனை அரசினர் முஸ்லிம் பாடசாலையில் இடம்பெற்றது. பாடசாலை வளாகத்தில் புதன்கிழமை (22) இடம்பெற்ற இந்நிகழ்வில், திருகோணமலை மாவட்டத்தில் மூன்று கல்வி வலயங்களில் 11 பாடசாலைகள் இத்திட்டம் மூலம் பயனடைகின்றன. இதன்போது புதிதாக அமைக்கப்பட்ட நீர் சுகாதார கூடங்கள், பாடசாலை தோட்டங்கள், தளபாடங்கள் போன்றன பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டன.

குறித்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜீ.திசாநாயக்க, மாகாண கல்வி பணிப்பாளர் அஹிலா கனகசூரியம், முஸ்லிம் எயிட் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் பைசர்கான், கிண்ணியா வலயக் கல்வி பணிப்பாளர் ஏ.நசூகர்கான், முஸ்லிம் எயிட் லண்டன் நாட்டின் கண்காணிப்பு மதிப்பீட்டு முகாமையாளர் பௌலா ரெயீஸ், நிகழ்ச்சித் திட்ட அலுவலர் சார்லொட் டெயிலர் உட்பட ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# அதிபராக பதவியேற்பு



(வெல்லாவெளி செய்தியாளர்)

சம்மாந்துறை கல்வி வலயத்தின் திட்டமிடலுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.ஹைதர் அலி குருநாகல் மாவட்டத்தில் உள்ள கிரியுல்ல கல்வி வலய சியம்பலாகஸ்கொடுவ அல்-மதீனா வித்தியாலய (தேசிய பாடசாலை) அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம்-2 அதிகாரியான ஹைதர் அலி முன்னதாக மட்டக்களப்பு கல்வி வலயத்திலும் பிரதிக் கல்விப் பணிப்பாளராக சிறப்பாக பணியாற்றியுள்ளார். அம்பாறை மாவட்டத்திலுள்ள நாவிதன் வெளி மத்திய முகாமை வசிப்பிடமாகக்கொண்ட இவர் இன்று வெள்ளிக்கிழமை (24) தமது கடமைகளை பொறுப்பேற்பார்.

# கல்முனை தரவைச் சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம்

கல்முனை தரவைச் சித்தி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் நேற்று 23ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, மார்ச் 06ஆம் திகதி தீர்த்த உற்சவத்துடன் நிறைவு பெறவுள்ளது.

487 ஆண்டுகள் பழைமை வாய்ந்தது இவ்வாலயம். 12 நாட்கள் நடைபெறும் இந்த உற்சவத்தில் 05ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முத்துச்சப்பர பவனி நடைபெறும். இந்த உற்சவக்காலத்தில் நடைபெறும் விசேட பூஜை வழிபாடுகளுடன், தினமும் மாலை 6 மணி தொடக்கம் 6.30 மணி வரையும், கல்முனை-03 பண்ணிசை மன்றத்தினரின் கூட்டுப்பிரார்த்தனை



நிகழ்வும் இடம்பெறும். அதேவேளை, இரவு 6.30இலிருந்து 7 மணிவரையும் தெய்வீகப் பேருரைகள் இடம்பெறவுள்ளன.

உற்சவ காலத்தின் பிரதம குருக்களாக சிவஸ்ரீ மா.கு.சதாசிவ குருக்கள், சிவஸ்ரீ முத்துக்குமார குருக்கள் ஆகியோர் பணியாற்றுவார்கள். ஆலய பிரதம குரு, இளம் சைவப்புலவர் விஷ்வ பிரம்மஸ்ரீ சு.ஹரிஹரன் பணிகளில் ஈடுபடுவார். மகோற்சவத்தின் இறுதி நாளன்று நல்லம்மா பூபாலபிள்ளையினால் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com



உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திப்போட எத்தனிக்கும் அரசின் செயற்பாடுகளுக்கெதிராக தேசிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்த மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி புதன்கிழமை(22) மாலை அம்பாறை நகரில் இடம்பெற்றது. (மாவடிப்பள்ளி செய்தியாளர்)

# கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்துக்கு புதிய தலைவர், செயலாளர் தெரிவு




(பாறுக் ஷிஹான்)

சுமார் 40 வருடங்களுக்கு மேற்பட்ட வரலாற்றைக்கொண்ட கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் 2023/2024 ஆண்டுக்கான புதிய நிர்வாக சபையை தெரிவுசெய்வதற்கான பொதுக்கூட்டம் கல்முனை மாவட்ட நீதவான் நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் புதன்கிழமை (22) நடைபெற்றது.

இவ்வருடாந்த பொதுக்கூட்டத்தின்போது நடப்பு வருடத்திற்கான நிர்வாகத் தெரிவு இடம்பெற்றதுடன், கல்முனை சட்டத்தரணிகள் சங்கத் தலைவராக சட்டத்தரணி எம்.ஐ. றயிசூல் ஹாதி ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். தொடர்ந்து செயலாளராக சட்டத்தரணி ரோசன் அக்தரும், பொருளாளராக சட்டத்தரணி பிறேம் நவாத்தும் தெரிவுசெய்யப்பட்டனர்.

அத்துடன் இதர பதவி நிலைகளுக்கும் ஏனைய நிர்வாகிகளும் தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



அட்டாளைச்சேனை ஜலால்தீன் வீதியின் வடிகான் நீர் வழிந்தோட முடியாமல் குப்பைகள் நிறைந்து காணப்படுவதைக் காணலாம். இதனை அகற்றித்தரக்கோரி பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (கோணாவத்தை செய்தியாளர்)









இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகளுக்கமைவாக கோறளைப்பற்று பிரதேச இந்து அறநெறிப் பாடசாலைகள் ஒன்றியமும், கிண்ணையடி அருள்மிகு ஆதிலிங்கேஸ்வரர் ஆலயமும் இணைந்து நடத்திய மட்டக்களப்பு மாவட்ட மகா சிவராத்திரி விழா சனிக்கிழமை (18) இரவு வாழைச்சேனை கிண்ணையடி அருள்மிகு ஆதிலிங்கேஸ்வரர் ஆலய முன்றலில் இடம்பெற்றது. (மட்டக்களப்பு செய்தியாளர்)

# வைத்தியசாலை சிற்றூழியர்களால் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுப்பு




(மூதூர் செய்தியாளர்)

மூதூர் தள வைத்தியசாலையின் சிற்றூழியர்கள் வைத்தியசாலைக்கு முன்பாக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் வியாழக்கிழமை (23) காலை ஈடுபட்டனர்.

''மருந்துத் தட்டுப்பாட்டை உடன் நீக்கு, வாழ்க்கைச் செலவுக்கேற்ற சம்பள உயர்வை நடைமுறைப்படுத்து, அதிகரித்த மின் கட்டணத்தை உடன் நிறுத்து'' உள்ளிட்ட சுலோகங்களை ஏந்தி கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.




(கந்தளாய் செய்தியாளர்)

மின்சாரக் கட்டணம் அதிகரித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கந்தளாய் தள வைத்தியசாலை ஊழியர்களினால் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று வியாழக்கிழமை (23) முன்னெடுக்கப்பட்டது.

வைத்தியசாலையின் முன்னால் இக்கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதில் நூற்றுக்கும் மேற்பட்ட சுகாதார உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

''மின் கட்டணத்தைக் குறை, மக்களை துன்புறுத்தாதே, மக்களை வீதிக்கு இறக்காதே, மேலதிக நேர கொடுப்பனவை வழங்கு, சுற்றுநிருபங்களை இரத்துச் செய்'' போன்ற வாசகங்களை கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் ஏந்தியிருந்தார்கள்.

(கிண்ணியா செய்தியாளர்)

கிண்ணியா தள வைத்தியசாலையின் சுகாதார சிற்றூழியர்கள் ஊழியர்கள் வைத்தியசாலைக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் வியாழக்கிழமை காலை ஆறு மணிமுதல் 12 மணிவரை ஈடுபட்டனர்.

இதனால் வைத்தியசாலை சேவைகளுக்கு அசௌகரியம் ஏற்பட்டிருந்தது. எனினும், முக்கியமான சேவைகள் மற்றும் மருத்துவ வசதிகள் வழங்கப்பட்டன. ஆரம்ப சிகிச்சைப் பிரிவு, மாதாந்த சிகிச்சை பெறுவதற்கான மருந்துகளும் வழங்கப்பட்டன.

''சம்பள உயர்வு, ஐந்து நாட்கள் வேலையாக்குதல், குறைந்த ஊழியர்களைக் கொண்டு நிறைவான வேலை செய்தல், இவற்றுக்கு மேலதிகமான கொடுப்பனவு வழங்குதல்'' முதலான கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.




# குறுக்கு வீதியில் கிரிக்கெட் விளையாடியதால் ஏற்பட்ட மோதலில் கத்தி வெட்டு தாக்குதல்

## மூவர் வைத்தியசாலையில் அனுமதி

(பாறுக் ஷிஹான்)



வீதி கிரிக்கெட் விளையாட்டினால் ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் காயமடைந்த மூவர் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இச்சம்பவம் கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலைய எல்லைக்குட்பட்ட கடற்கரைப் பள்ளி வீதியில் நேற்று வியாழக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த கல்முனை தலைமையகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, தொடர்ச்சியாக கடற்கரைப்பள்ளி வீதியை ஊடறுத்துச் செல்லும் குறுக்கு வீதியில் சில இளைஞர்கள் ஒன்றிணைந்து வீதிப் போக்குவரத்தில் ஈடுபடும் பாதசாரிகளுக்கு அசௌகரியம் ஏற்படுத்தும் வண்ணம் கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபடுவது வழமை.

இந்நிலையில், கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபடும் நபர்களால் தொடர்ச்சியாக அப்பகுதியில் இடையூறு ஏற்பட்டு வந்துள்ளது. இதனை நிறுத்துமாறு அருகிலுள்ள வர்த்தக நிலைய உரிமையாளர் கிரிக்கெட் விளையாடியவர்களிடம் தெரிவித்துள்ளார். இதன்போது ஏற்பட்ட கைகலப்பில் வாள் வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இம்மோதலினால் 3 பேர் காயமடைந்த நிலையில் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர். இவ்வாறாக கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பகுதியிலுள்ள வீதிகளில் கிரிக்கெட் விளையாட்டு இடம்பெறுவதுடன், வீதியில் செல்வோர் அதிகளவில் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக இச்சம்பவத்திற்கு விசாரணைக்காக ஸ்தலத்திற்கு வருகை தந்த பொலிஸாரிடம் பொதுமக்கள் குறிப்பிட்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# யானைத் தாக்குதலிலிருந்து பாதுகாப்பு பெறுவது தொடர்பான கலந்துரையாடல்





(மாளிகைக்காடு செய்தியாளர்)

எதிர்வரும் காலங்களில் காரைதீவு பிரதேசத்தில் காட்டு யானைகளின் தாக்கங்களினால் சொத்துகள், உடைமைகள், பயிர்கள் மற்றும் தொழில் நிலையங்கள் போன்றனவற்றில் ஏற்படும் பாதிப்புகளை குறைத்தல் மற்றும் காயமடைதல், உயிராபத்துகள் ஏற்படுவதனை தடுத்தல் எனும் கருப்பொருளிலான முன்னாயத்தம் தொடர்பான கலந்துரையாடல் காரைதீவு பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது, கடந்த காலங்களில் யானைத் தாக்கம் காரணமாக காரைதீவு பிரதேசத்தில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்தும், எதிர்வரும் காலங்களில் இப்பாதிப்புகளை குறைப்பதற்கான சாத்தியமானதும், நிலையானதுமான தீர்வுகள் குறித்தும் மிக விரிவாக கலந்தாலோசிக்கப்பட்டதோடு காத்திரமான முடிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கான தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

இந்நிகழ்வானது நிர்வாக கிராம உத்தியோகத்தர், காட்டு யானைத்தாக்கத்திற்கு முகம்கொடுக்கின்ற 09 பிரிவுகளினதும் கிராமசேவகர்கள் (காரைதீவு-01,06,07,10,11,12, மாளிகைக்காடு-மேற்கு, மாவடிப்பள்ளி-கிழக்கு மற்றும் மேற்கு), வனஜீவராசிகள் பாதுகாப்பு நிறுவனம் சார்பான மாவட்ட அலுவலகப் பிரதிநிதிகள் மற்றும் வளத்தாப்பிட்டி நிலையப் பொறுப்பதிகாரி, காரைதீவு பொலிஸ் நிலையம் சார்பான பொலிஸ் அதிகாரிகள், காரைதீவு மற்றும் சாய்ந்தமருது ஆகிய பிரதேசங்களின் கமநல சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், காரைதீவு பிரதேசத்தின் மத்திய மற்றும் மாகாண விவசாய போதனாசிரியர்கள், பிரதேச செயலகத்தின் விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேசத்தின் விவசாய அமைப்புகள் சார்பான பிரதிநிதிகள் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது.

## போடியார் புலம்பல்!



**21 அரசியல் கைதிகளை ஜனாதிபதி நரில் நிபந்தனையற்று விடுதலை செய்தித்தாரு எண்ட செய்தி ஒண்ட பார்த்தன் சோக்கான காரியம்தான். ஆனா, அந்த செய்திய போட்டு பக்கத்தில இராஜாங்க அமைச்சர் மட்டக்களப்பு கொட்டான் புள்ளையான பக்கத்தில வைச்சு நரியை சேர்த்த போட்டோ வெளிவந்திருக்கு எலுவா? இதபார்ததும் குழறுறதா.. சிரிக்கிறதா எண்டு தெரியல்ல.. அடே புள்ளையானுக்கும் இதுக்கும் என்னடா சம்பந்தம்.. ? ஆரோ முயற்சி எடுக்க இந்த நாக்கிலயான் புளு படம் எடுக்குது.. இதப்பார்து வீணைக் கட்சி டக்லஷி கடுப்பாம் எண்டு கேள்வி.**



அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை மாணவர்களின் தேவை கருதி ஒரு தொகுதி பிளாஸ்ரிக் கதிரைகள் புதன்கிழமை (22) அன்பளிப்பு செய்யப்பட்டது. பாடசாலை ஏ.சீ.எம்.ஹரீஸ் தலைமையில் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் Ourown charity நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் நஷாட் சம்சுடீன் கலந்து கொண்டு கதிரைகளை அன்பளிப்பு செய்தார். (அட்டாளைச்சேனை மத்திய செய்தியாளர்)

# அபராதம் விதிப்பு

(கோணாவத்தை செய்தியாளர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள வீதிகளில் மது போதையில் பொது சமாதானத்தை சீர்குலைத்தவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை பகுதிகளிலுள்ள வீதிகளில் பொது சமாதானத்தை சீர்குலைத்த குற்றத்திற்காக பொலிஸாரினால் மூன்று சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின்படி, குறித்த பிரதேசத்திற்கு சென்ற பொலிஸார் சந்தேக நபர்களை கைதுசெய்து அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் வியாழக்கிழமை (23) ஆஜர்படுத்தியபோது தலா 3000 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

(கோணாவத்தை செய்தியாளர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திராய்க்கேணி ஒலுவில் பிரதேசத்தில் அனுமதிப்பத்திரமின்றி சாராய விற்பனையில் ஈடுபட்ட நபர் ஒருவருக்கு 25ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

திராய்க்கேணி பிரதேசத்தில் அனுமதிப் பத்திரமின்றி 180 மில்லி லீற்றர் நிறையுடைய அரச சாராயத்தை 650 ரூபாவிற்கு விற்பனை செய்தமை மற்றும் 180 மில்லி லீற்றர் அடங்கிய 19 சாராய போத்தல்களை தன்வசம் வைத்திருந்தமை ஆகிய குற்றங்களுக்காக அக்கரைப்பற்று பொலிஸார் நபர் ஒருவரை கைதுசெய்திருந்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் வியாழக்கிழமை (23) ஆஜர்செய்தபோது முதலாவது குற்றத்திற்கு 10 ஆயிரம் ரூபாவும், இரண்டாவது குற்றத்திற்காக 15 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது.

# உயிரிழந்த நிலையில் யானை மீட்பு



(கனகராசா சரவணன்)

அம்பாறை அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள மொட்டையாறு மலைப் பகுதியில் உயிரிழந்த நிலையில் யானை ஒன்றை புதன்கிழமை (22) மீட்டுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

குறித்த யானை மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக நடக்க முடியாமல் உயிரிழந்துள்ளதுடன் அதனை அங்கிருந்து அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

# மொரவெவ முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் தாக்கியதாகக் கூறி 18 வயது இளைஞன் மஹதிவுல்வெவ வைத்தியசாலையில் அனுமதி

(அப்துல்சலாம் யாசீம்)


திருகோணமலை - மொரவெவ முன்னாள் பிரதேச சபை உறுப்பினரொருவர் தன்னை தாக்கியதாக இளைஞரொருவர் மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். இச்சம்பவம் புதன்கிழமை (22) இடம்பெற்றுள்ளது. ரொட்டவெவ - மிரிஸ்வெவ பகுதியைச் சேர்ந்த பாருக் பர்ஸாத் (18 வயது) என்பவரே இவ்வாறு அனுமதிக்கப்பட்டுள்ளார்.


தன்னுடைய வளர்ப்பு மாடு மொரவெவ முன்னாள் பிரதேச சபை உறுப்பினரின் மாட்டுடன் மேய்ச்சலுக்கு சென்றபோது அம்மாட்டை தேடி அவரது வீட்டுக்கு குறித்த இளைஞர் சென்ற வேளை அவர் தன்னை தாக்கியதாகவும் தனக்கு நீதியை பெற்றுத் தருமாறும் கோரி மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இத்தாக்குதல் குறித்து தாக்குதலுக்குள்ளான இளைஞரின் தந்தை பொலிஸ் அவசர அழைப்பு இலக்கமான 119 எனும் இலக்கத்துக்கு அழைப்பு விடுத்து அறிவித்துள்ளதாக பாதிக்கப்பட்டவரின் தந்தை குறிப்பிட்டார். இருந்தபோதிலும், தாக்குதல் நடத்திய மொரவெவ முன்னாள் பிரதேச சபை உறுப்பினரான வை.டி.ஜெனீர்தீன் (40 வயது) தன்னை குறித்த இளைஞர் தாக்கியதாக கூறி அவரும் குறித்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருவதாகவும் தெரிய வருகிறது.

இத்தாக்குதல் தொடர்பிலான விசாரணைகளை மொரவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பேடன் பவல் தின நிகழ்வு






(கோணாவத்தை செய்தியாளர்)

அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற "பேடன் பவல்" தின விழா புதன்கிழமை (22)அக்கரைப்பற்று இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. மாவட்ட ஆணையாளர் எம்.ஐ.எம்.உதுமாலெவ்வை தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சங்கத்தின் தலைவரும், பிரதேச செயலாளருமான எஸ்.எல்.எம்.ஹனிபா, அக்கரைப்பற்று இராணுவ பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் விவுல சந்திரஷிரி, வலயக் கல்விப் பணிப்பாளர் உட்பட உதவி மாவாட்ட ஆணையாளர்களும் கலந்துகொண்டனர்.

நான்கு கல்வி வலயங்களிலிருந்தும் சுமார் 300இற்கும் மேற்பட்ட சாரணர்கள் பங்குபற்றிய இந்நிகழ்வில் முன்னாள் மாவட்ட ஆணையாளர் எஸ்.ரவீந்திரனின் சாரணிய சேவையைப் பாராட்டி சங்கத்தின் சார்பில் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

# தொழுநோய் தினத்தை முன்னிட்டு கல்முனையில் மாநாடு





(மாவடிப்பள்ளி செய்தியாளர்)

சர்வதேச தொழுநோய் தினத்தை முன்னிட்டு தொழுநோய் தொடர்பான அம்பாறை மாவட்ட மாநாடொன்று புதன்கிழமை (22) கல்முனையில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வளவாளர்களாக கல்முனை ஆதார வைத்திய சாலையின் தோல் நோய்களுக்கான விசேட வைத்திய நிபுணர் ஐ.எல்.மாஹில், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தொற்றுநோய் தடுப்பியலாளர் வைத்தியர் எம்.ஏ.சி.எம்.பஸால் ஆகியோர் கலந்து கொண்டதுடன், கல்முனை பிராந்தியத்தின் தொழுநோய் தொடர்பான புள்ளிவிபரங்களை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜீ.சுகந்தன் முன்வைத்தார்.

இந்நிகழ்வுக்கான அனுசரணையை அலயன் அபிவிருத்தி நிதியம் வழங்கியிருந்தது. இதன் பணிப்பாளர் ரகு பாலச்சந்திரன் தமது நிறுவனம் தொடர்பில் இங்கு விசேட உரை யாற்றினார். இதன்போது எதிர்காலத்தில் தொழு நோயை கல்முனை பிராந்தியத்திலிருந்து முற்றாக ஒழிப்பதற்கான ஆலோசனைகள், அபிப்பிராயங்கள் தொடர்பாகவும் கலந்துரை யாடப்பட்டது.

இதன்போது, இங்கிலாந்தின் தொழுநோய் மிஸனின் பிரதிநிதி சி.என்.அருளானந்தன் மற்றும் ஏடிரீ நிறுவனத்தின் பிராந்திய முகாமை யாளர் ஜெபசுதன், பிராந்திய சுகாதாரப் பிரதி பணிப்பாளர் டாக்டர் எம்.பீ.ஏ.வாஜித், பணி மனையின் பிரிவுத் தலைவர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், வைத்தியர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், சர்வமதத் தலைவர்கள், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், இங்கிலாந்தின் தொழுநோய் மிஸனின் பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

# இந்துக்களுக்கு நன்மை செய்யாவிடினும் தீமை செய்யாதிருக்க வேண்டும்

## கிழக்கு மாகாண இந்து ஒன்றியத்தின் செயலாளர் கதிர் பாரதிதாசன்

(புளியந்தீவு செய்தியாளர்)

இந்து மதம் இந்த நாட்டின் தொன்மைமிக்கது. அவர்கள் நாட்டின் பூர்வீகக் குடிகள். அரசு இந்து மதத்திற்கும் இந்துக்களுக்கும் நன்மை செய்யாவிட்டாலும் பரவாயில்லை, தீமையாவது செய்யாதிருக்க வேண்டுமென கிழக்கு மாகாண இந்து ஒன்றியத்தின் செயலாளர் கதிர் பாரதிதாசன் தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில், இந்துக்களுக்கும் இந்து சமயத்திற்கும் இடையூறுகளும் தீமைகளும் இந்த நாட்டில் இடம்பெற்று வருவது யாவரும் அறிந்த விடயம். எத்தனையோ முறைப்பாடுகள், மகஜர்கள் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டாலும் அரசு இவைகளை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. இதனை யார் செய்கிறார்கள் என்றால் அரசும் அரசின் அதிகாரம் பெற்றவர்களுமே செய்கிறார்கள்.

திருகோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், அகத்தியர் ஸ்தாபனம், வெடுக்குநாறிமலை, கன்னியா என்பன இந்து சமயத்தினதும் இந்துக்களினதும் பூர்வீகச் சொத்துகள். அவைகளுக்கு இடையூறும் இடைஞ்சல்களும் தடைகளும் ஏற்படுத்துவதும் தொல்பொருள் சின்னங்களையும் தொல்பொருள் இடங்களையும் கபளீகரம் செய்வதையும், செய்ய முனைவோரையும் அரசு தடுத்துநிறுத்த வேண்டும்.

ஜனாதிபதி நந்திக் கொடியை பறக்க விடுவதாலும் சரஸ்வதி தேவியின் பெயரை கலாசார மண்டபத்திற்கு சூட்டுவதாலும் இந்து மதத்திற்கான பாதிப்புகள் நின்றுவிடப் போவதில்லை. ஜனாதிபதி முதலில் இந்துக்களுக்கும் இந்து சமயத்திற்கும் ஏற்படும் பாதிப்புகளை தடுக்க வேண்டும் - என்றார்.

# உலகச் செய்திகள்

## அமைதிக்கான நோபல் பரிசு: 305 பெயர்கள் பரிந்துரை




நடப்பு ஆண்டிற்கான அமைதிக்கான நோபல் பரிசுக்கு 305 பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டிருப்பதாக நோபல் நிறுவனம் தெரிவித்துள்ளது.

உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி, துருக்கி ஜனாதிபதி எர்டோகன், நேட்டோ தலைவர் ஜென்ஸ் ஸ்டோல்டன்பெர்க் உள்ளிட்டோர் இந்த ஆண்டுக்கான அமைதிப் பரிசுக்கு பரிந்துரை செய்யப்பட்டவர்களில் பட்டியலிலுள்ளனர்.

கடந்த 2016ஆம் ஆண்டு அதிகபட்சமாக 376 பேர் அமைதிக்கான நோபல் பரிசுக்கு பரிந்துரை செய்யப்பட்ட நிலையில், இந்தாண்டு 305 பேரின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

## உலகில் ஒவ்வொரு 2 நிமிடங்களுக்கும் ஒரு பெண் இறக்கிறார்



"உலகில் ஒவ்வொரு 2 நிமிடங்களுக்கும் கர்ப்பக்காலம் அல்லது பிரசவத்தின்போது ஒரு பெண் உயிரிழக்கிறார்" என ஐக்கிய நாடுகள் சபை அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளது.

கடந்த 20 ஆண்டுகளில் பேறுகால இறப்பு விகிதம் 3இல் ஒரு பங்கு குறைந்திருந்தாலும் அதீத இரத்தப்போக்கு, உயர் இரத்த அழுத்தம், மகப்பேறு தொடர்பாக நோய்கள், கருத்தடை சிக்கல்கள் போன்ற சிக்கல்களாலும் இந்த இறப்புகள் நிகழ்வதாக அந்த புள்ளிவிவரம் கூறுகிறது. 2020ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு சுமார் 800 பெண்கள் வீதம் 2 இலட்சத்து 87 ஆயிரம் பேர் இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

ஆப்கனிஸ்தான், கொங்கோ, சிரியா போன்ற மனித உரிமை மீறல்கள் அதிகமுள்ள நாடுகளிலும் ஏழ்மையான நாடுகளிலும்தான் இந்த இறப்பு வீதம் கணிசமாக அதிகரித்துள்ளது என்று ஐ.நா. தெரிவித்துள்ளது.

# உக்ரைன் மீதான ரஷ்யப் போர்: இன்றுடன் ஒரு வருடம் நிறைவு!



ரஷ்யா மற்றும் உக்ரைன் ஆகிய நாடுகளுக்கிடையிலான போர் மூண்டு இன்று (24) ஒரு வருடம் நிறைவடைந்துள்ளது.

"போர்க்களத்தில் ரஷ்யாவை தோற்கடிக்க முடியாது" என அந்நாட்டு ஜனாதிபதி புட்டின் சூளுரைத்துள்ள நிலையில், "உக்ரைனை ஒருபோதும் ரஷ்யாவால் வீழ்த்த முடியாது" என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் பதிலடி கொடுத்துள்ளார்.

நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த 2022ஆம் ஆண்டு பெப்ரவரி 24ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா போர்த் தொடுத்தது. இந்தப் போர் ஏற்பட்டு இன்று ஓராண்டு நிறைவடைகிறது.

இதையொட்டி, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் திங்களன்று (20) முன்னறிவிப்புகள் எதுவுமின்றி உக்ரைன் தலைநகர் கீவ்வுக்கு சென்றிருந்தார். அங்கு உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கியை சந்தித்து ரூ.4,135 கோடி மதிப்பிலான ஆயுதங்களை வழங்குவதாக அறிவித்தார். அங்கிருந்து ரயில் மூலம் போலாந்து சென்ற ஜோ பைடனுக்கு சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது. பின்னர் தலைநகர் வர்ஷவுக்கு (Warsaw) சென்ற பைடன், போலந்து ஜனாதிபதி Andrzej Dudaவை சந்தித்துப் பேசினார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர், "உக்ரைனுக்கான அமெரிக்காவின் ஆதரவை யாராலும் அசைக்க முடியாது. முன்பை விட உறுதியாகவுள்ள உக்ரைனுக்கு நேட்டோ நாடுகள் துணை நிற்கும். போரில் உக்ரைனை ஒருபோதும் ரஷ்யாவால் தோற்கடிக்க முடியாது" - என்றார்.

ஏலவே ரஷ்யாவை வீழ்த்திவிடலாம் என்ற தவறான நம்பிக்கையில், அமெரிக்காவால் வழிநடத்தப்படும் நேட்டோ படைகள் உக்ரைன் போரை ஊக்குவிப்பதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், உள்நாட்டு மோதலை, உலகளாவிய மோதலாக மாற்ற மேற்கத்தேய நாடுகள் முயற்சிப்பதாகவும், மேற்கத்தேய நாடுகளே உக்ரைனில் மோதல் அதிகரிப்பதற்கு முழு பொறுப்பு எனவும் குற்றஞ்சாட்டினார். மோதலை அமைதியான முறையில், பேச்சு மூலம் தீர்க்க விரும்புவதாகவும், ஆனால், முற்றிலும் வேறான சூழல் உருவாக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே, உக்ரைன் உடனான போரில் ரஷ்யாவை அழிக்க அமெரிக்கா மற்றும் நேட்டோ அமைப்பு நாடுகள் வெளிப்படையாக செயற்பட்டு வருவதாக குற்றஞ்சாட்டிய ரஷ்ய ஜனாதிபதி புட்டின், அணு ஆயுத ஒப்பந்தத்திலிருந்து வெளியேறுவதாக தெரிவித்தார்.

இந்நிலையில், போலந்து தலைநகர் வர்ஷவில் செய்தியாளர்களை சந்தித்த பைடன், அமெரிக்காவுடனான அணுஆயுத கட்டுப்பாட்டு ஒப்பந்தத்திலிருந்து விலகியதன் மூலம் ரஷ்யா பெரிய தவறு செய்துவிட்டது எனத் தெரிவித்தார்.

நேட்டோ கூட்டமைப்பில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த 2022ஆம் ஆண்டு பெப்ரவரி 24ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா போர்த் தொடுத்தது. ரஷ்யத் தாக்குதலால் உக்ரைன் தலைநகர் கீவ், இரண்டாவது பெரிய நகரமாக கார்கீவ், கிழக்குத் துறைமுக நகரான மரியுபோல் உள்ளிட்ட நகரங்கள் உருக்குலைந்துள்ளதுடன், இருதரப்பும் ஏராளமான உயிரிழப்புகளை சந்தித்துள்ளன.

போர் பதற்றத்தால் உயிர் பிழைத்தால் போதுமென்று எண்ணி உக்ரைனிலிருந்து இதுவரை 18.6 மில்லியன் பேர் வெளியேறி அண்டை நாடுகளில் அகதிகளாக தஞ்மடைந்துள்ளனர்.

முந்தைய சோவியத் ஒன்றியத்திலிருந்த நாடுகளில் ஒன்றான உக்ரைனில் ஒருபகுதியான கிரிமியாவை 2014ஆம் ஆண்டு ரஷ்யா மீண்டும் கைப்பற்றியது. அதையடுத்து கிழக்கு உக்ரைனிலுள்ள டொனட்ஸ்க் உள்ளிட்ட நகரங்களிலும் ரஷ்யாவுக்கு ஆதரவாகக் குழுக்கள் செயற்பட்டு வருகின்றன.

ரஷ்ய ஆதரவாளர்கள் மீது உக்ரைன் அரசு அடக்குமுறைகளை ஏவுவதாகக் குற்றஞ்சாட்டிய ரஷ்யா, அதைத் தடுக்க இராணுவ நடவடிக்கை எடுக்கப்போவதாகக் கூறி உக்ரைன் எல்லையில் படைகளைக் குவித்தது. போர் தொடுத்தால் கடும் விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என பிரான்ஸ், அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகள் எச்சரித்துவந்த நிலையில், கடந்த 2022 பெப்ரவரி 23ஆம் திகதி ரஷ்ய ஜனாதிபதி வெளியிட்ட அறிவிப்பில் கிழக்கு உக்ரைனில், உக்ரைன் இராணுவமும், நேட்டோ இராணுவமும் இணைந்து இனப்படுகொலையில் ஈடுபட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டியதுடன், உக்ரைனிலுள்ள ரஷ்ய ஆதரவாளர்களைக் காப்பதற்கும் அப்பகுதியிலிருந்து உக்ரைன் இராணுவத்தை வெளியேற்றவும் இராணுவ நடவடிக்கையைத் தொடங்கியுள்ளதாகவும் கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி அறிவித்த ரஷ்யா, உக்ரைன் மீது தாக்குதல் நடத்த தொடங்கியமை குறிப்பிடத்தக்கது.

## நேஷனல் ஜியோகிராபிக் பரிசுபெற்ற வெண்தலை கழுகு



உலகின் சிறந்த புகைப்படத்துக்கான நேஷனல் ஜியோகிராபிக் பரிசைப் பெற்றுள்ள இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கார்த்திக் சுப்ரமணியன் எடுத்த வியக்க வைக்கும் கழுகுப் படங்கள்.

நேஷனல் ஜியோகிராபிக் நிறுவனம் ஆண்டுதோறும் உலகின் தலைசிறந்த புகைப்படத்தைத் தெரிவுசெய்து பரிசு வழங்கி வருகிறது. இந்த ஆண்டுக்கான பரிசை இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கார்த்திக் சுப்ரமணியம் என்ற புகைப்படக் கலைஞர் பெறுகிறார். காட்டுயிர்களைப் படம் பிடிப்பதில் வல்லுநரான இவர் எடுத்த வெண்தலை கழுகுகள் (Bald Eagles) புகைப்படத்துக்காக இந்த விருது அறிவிக்கப்பட்டிருக்கிறது. இயற்கை, மக்கள், இடங்கள் மற்றும் விலங்குகள் என்ற நான்கு வகைகளில் கிட்டத்தட்ட 5,000 படங்கள் இந்தப் பரிசுக்கான பரிசீலனைக்கு வந்துள்ளன. அவற்றிலிருந்து கார்த்திக் சுப்ரமணியம் எடுத்த படம் சிறந்ததாகத் தெரிவாகியுள்ளது. அலாஸ்காவின் சில்காட் பால்ட் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் எடுக்கப்பட்ட அந்தப் படத்தில் நான்கு வெண்தலைக் கழுகுகள் இடம்பெற்றுள்ளன.



**பிரேஸிலில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி 46இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். நூற்றுக்கணக்கானோர் காணாமல்போயுள்ள நிலையில், மீட்புப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.**

## இ.பி.எஸ். வசமானது அ.தி.மு.க.

### பழனிசாமியின் படத்துக்கு பாலாபிஷேகம் செய்து தொண்டர்கள் கொண்டாட்டம்



அ.தி.மு.க. பொதுக்குழு செல்லும் என்று உச்சநீதிமன்றம் நேற்று தீர்ப்பு வழங்கியுள்ளது. உச்சநீதிமன்ற தீர்ப்பால் ஓ.பி.எஸ். தரப்பினர் பெரும் அதிர்ச்சியடைந்துள்ள நிலையில், அ.தி.மு.க. தொண்டர்கள் அ.தி.மு.க. அலுவலகத்தில் பட்டாசு வெடித்தும், இனிப்புகளை வழங்கியும், எடப்பாடி பழனிசாமியின் உருவப்படத்திற்கு பால் அபிஷேகம் செய்தும் தொண்டர்கள் தமது சந்தோசத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

அ.தி.மு.க. பொதுக்குழு முடிவுகள் செல்லாது என அறிவிக்கக்கோரி ஓ. பன்னீர்செல்வம் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவில் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் நேற்று தீர்ப்பு வழங்கினர். அதில், கடந்த ஆண்டு ஜூலை 11ஆம் திகதி நடைபெற்ற அ.தி.மு.க. பொதுக்குழு செல்லும். அ.தி.மு.க. இடைக்கால பொதுச் செயலாளராக எடப்பாடி பழனிசாமி தெரிவுசெய்யப்பட்டதும் செல்லும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுக்குழு செல்லும், அதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் செல்லும் என உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ள நிலையில்,

"அ.தி.மு.க. நடத்திய சட்டப்போராட்டத்திற்கு வெற்றி கிடைத்துள்ளது. இனி எழுச்சியோடு கட்சிப்பணிகள் நடைபெறும். உச்சநீதிமன்றமே தீர்ப்பு கூறிவிட்டதால் இனி அ.தி.மு.க. தலைமை குறித்து எந்த கேள்வியும் இல்லை.

இனி 1.5 கோடி அ.தி.மு.க. தொண்டர்களின் பொதுச் செயலாளராக இருப்பேன். அ.தி.மு.கவுக்கும் ஓ.பி.எஸுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதை உச்ச நீதிமன்றம் உறுதிசெய்துள்ளது. ஒற்றை தலைமை விவகாரத்தில் ஒன்றரை கோடி அ.தி.மு.க. தொண்டர்களின் எண்ணம் நிறைவேறியுள்ளது. ஓபிஎஸ் அரசியல் முடிந்துவிட்டது. உண்மை, தர்மம், நீதி இன்று வென்றுள்ளது. நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து ஓ. பன்னீர்செல்வம் தரப்பு மேன்முறையீடு செய்தாலும் கவலை இல்லை. டிடிவி தினகரன் தனிக்கட்சி தொடங்கி போய்விட்டார்; இரட்டை இலை சின்னம் குறித்து பேச அவருக்கு தகுதி இல்லை" என எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

# இஸ்ரேல் இராணுவம் துப்பாக்கிச் சூடு: சிறுவன் உட்பட 11 பலஸ்தீனர்கள் பலி





இஸ்ரேல் இராணுவத்தினர் மேற்கு கரை பகுதியில் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் சிறுவனொருவன் உட்பட பலஸ்தீனர்கள் 11 பேர் உயிரிழந்துள்ளதுடன், 100இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

போராளி குழுவினர் காஸாவிலிருந்து இஸ்ரேலை நோக்கி 6 ரொக்கெட் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இஸ்ரேலின் வான் தடுப்பு அமைப்புகளால் 5 ரொக்கெட்கள் சுட்டு வீழ்த்தப்பட்ட நிலையில், ஒன்று மட்டும் வெறும் தரையில் வீழ்ந்து வெடித்தது. காஸாவிலிருந்து ரெக்கெட்கள் ஏவப்பட்ட பகுதி மீது இஸ்ரேல் வான் தாக்குதல் நிகழ்த்தியது.

# தொடர் நிலநடுக்கங்களால் அதிரும் உலக நாடுகள்

தஜிகிஸ்தானில் 6.8 ரிச்டர் அளவில் நேற்று சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டதுடன், தொடர்ந்த தஜிகிஸ்தான் - சீன எல்லைப் பகுதியில் 6 முறை தொடர் அதிர்வுகள் பதிவாகியுள்ளன.

தஜிகிஸ்தானில் ஏற்பட்ட நிலநடுக்கத்தை தொடர்ந்து ஆப்கானிஸ்தானில் அடுத்தடுத்து 4 முறை நிலநடுக்கங்கள் பதிவாயுள்ளன. இந்த தொடர் நிலநடுக்கங்களால் மக்கள் பீதியில் உறைந்துள்ளனர்.

கடந்த 6ஆம் திகதி துருக்கி மற்றும் சிரியாவில் 7.8 ரிச்டர் அளவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் இருநாடுகளிலும் இதுவரை 47ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ள நிலையில், தற்போது உலகின் பல்வேறு நாடுகளில் பதிவாகி வருகின்றது. இதனால் மக்கள் பீதியடைந்துள்ளனர்.




இந்நிலையில், தஜிகிஸ்தானில் முர்கோப் எனும் பகுதியில் நேற்று காலை 6 மணியளவில் 6.8 ரிச்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. தஜிகிஸ்தானில் ஏற்பட்ட இந்நிலநடுக்கம் உஸ்பெகிஸ்தான், சீனா, ஆப்கானிஸ்தான் மற்றும் கிர்கிஸ்தான் உள்ளிட்ட நாடுகளில் உணரப்பட்டது.

அதிகபட்சமாக 6.8 ரிச்டர் அளவில் நிலநடுக்கத்தை தொடர்ந்து 5.0, 4.6, 4.9, 4.8 மற்றும் 4.7 ரிச்டர் அளவுகளில் அடுத்தடுத்து ஏற்பட்ட நிலநடுக்கத்தால் மக்கள் பீதியடைந்துள்ளனர்.

**குலுங்கிய ஆப்கான்**

தஜிகிஸ்தானில் நிலநடுக்கம் ஏற்பட்டு 20 நிமிடங்கள் கழித்து ஆப்கானிஸ்தானின் பைசாபாத்திலும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்நிலநடுக்கம் 6.7 ரிச்டர் அளவில் பதிவாகியுள்ளது.

இந்நிலநடுக்கத்தைத் தொடர்ந்து 5.0, 5.2 மற்றும் 4.8, 4.0 ரிச்டர் அளவுகளில் 5 நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளன. இத்தொடர் நிலஅதிர்வுகளால் பீதியடைந்த மக்கள் அலறியடித்துக்கொண்டு வீதிகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

**நேபாளிலும் அதிர்வு**

இதேவேளை, இமயமலையின் கீழ் அமைந்துள்ள புவித்தட்டுகள் நகர்வதால் உத்தரகாண்ட் மாநிலத்தில் நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்பிருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் அண்மையில் எச்சரிக்கை விடுத்திருந்தனர். இந்நிலையில், இமயமலை பகுதியில் அமைந்துள்ள நேபாள நாட்டின் பாஜுரா மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் 5.2 ஆக பதிவாகியுள்ளது. இந்த நிலநடுக்கத்தின் தாக்கத்தால் இந்தியாவிலுள்ள உத்தரகாண்ட் மாநிலத்திலும் நில அதிர்வு உணரப்பட்டுள்ளது.

இதேபோல் டில்லி, அரியானா, உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட வட இந்தியாவின் சில பகுதிகளிலும் நேற்றுமுன்தினம் இலேசான நில அதிர்வுகள் உணரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7